6

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



# செய்திகள்

## கம்பியில்லா மின்சாரம்

ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குக் கம்பிகள் மூலம்தான் மின்சாரம் பாய்ந்து செல்கிறது. இப்போது சில ரஷ்ய விஞ்ஞானிகள் கம்பி இல்லாமலேயே மின்சார சக்தியைக் கொண்டுபோவதற்கு ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறார்கள். இப்படிச் செய்வது சாத்தியம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

## தந்தியில் பேச்சு

நாம் வேறு ஊரில் உள்ளவர்களுக்கு அவசரமாகத் தந்தி கொடுக்கிறோம். நாம் எழுதித் தரும் வார்த்தைகளைத் தந்தி இலாகா, 'கட்டுக் கடகட கட்டுக் கட்டுக் கட்டு' என்ற ஒலிக்குறிகளாக மாற்றி மின்சாரக் கம்பி மூலம் அனுப்புகிறார்கள். இப்பொழுது அந்த ஒலிக்குறிகளைப் பேச்சுகளாகவே மாற்றப் பிரிட்டிஷ் தபால் இலாகா ஆராய்ந்து வருகிறது.

## பம்பாயில் அணுச் சக்தி நிலையம்

ஆசியாவிலேயே முதல் முதலாக, பம்பாயிலுள்ள டிராம்பே என்ற இடத்தில் இந்திய அணு உலை, அணுச் சக்தியை உற்பத்தி செய்ய, ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விவசாயம், தொழில், மருந்து ஆராய்ச்சியில் ரேடியோக் கதிர்இயக்க இஸோடோப்புகளைத் தயாரிக்க இங்கே ஆராய்ச்சிகள் நடத்தப்படுமாம். இந்த அணு உலைச் சாலையை நிர்மாணிக்க 50 விஞ்ஞானிகள் ஒரு வருஷம் இடைவிடாமல் உழைத்திருக்கிறார்களாம்.

## சென்னை முதல் குமரி வரையில்

சென்னையிலிருந்து குமரிமுனைவரை, கடலோரமாக நெடுஞ்சாலை ஒன்றை அமைக்க அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். இந்தப் பகுதியில் ரஸ்தாக்கள் முன்பே இல்லாத இடங்களில் அதற்குள் ஏற்பட்டுவிடும் என்று சென்னை முதல் அமைச்சர் கூறுகிறார்.

## குழந்தைகளுக்கான சினிமாப் படங்கள்

இப்போது பிற ராஜ்யங்களில் குழந்தைகளுக்காகவே சினிமாப் படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் தமிழில் மட்டும் அப்படி ஒன்றையும் காணோம். இந்த முயற்சியில் நம் தமிழ்ப் பட முதலாளிகளும் ராஜ்ய சர்க்காரும் ஈடுபட வேண்டும் என்று நம் ஊரிலுள்ள பல குழந்தைகள் சங்கங்கள் தீர்மானம் போட்டு, கேட்டுக்கொண்டிருக்கின்றன.

## சென்னையில் ஜனாதிபதி

ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரஸாத் 12-ஆம் தேதி சென்னை வந்து, இங்கே 15-ஆம் தேதி நடைபெற இருக்கும் சுதந்தர தின விழாவில் கலந்துகொள்கிறார். அதற்குப் பிறகு அவர் மதுரை ஜில்லாவில் சில இடங்களுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

## குழந்தைகள், ஜாக்கிரதை!

சென்னை நகரிலும் மற்றும் பெரிய ஊர்களிலும் தனியே செல்லும் குழந்தைகளை ஏமாற்றி, அவர்கள் அணிந்துள்ள நகைகளைப் பறித்துக் கொள்ளும் திருட்டு அடிக்கடி நடைபெறுகிறதாம். அதனால் பள்ளி செல்லும் குழந்தைகள் நகைகள் எதுவும் அணியாமல், நாலைந்து பேர்களாகச் செல்லவேண்டும் என்று அதிகாரிகள் எச்சரித்திருக்கிறார்கள்.

# கண்ணன்

## பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 16

15 - 8 - '56

| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| இந்தக் கொடி! | .. | 3 |
| சைனா சு - சூ | .. | 5 |
| மன்னன் திரும்பினான்! | .. | 10 |
| அதிருஷ்டம் | .. | 13 |
| ஆகஸ்டு சொல்லும் கதை | | 17 |
| மதம் பிடித்தது | .. | 20 |
| பாலர் கவியரங்கம் | .. | 23 |
| நட்பு வளர்க! | .. | 24 |
| விஞ்ஞானம் பேசுகிறார் | .. | 29 |
| இதுதான் உலகம் | .. | 32 |
| புலிக்குட்டி | .. | 37 |
| புத்தக விமரிசனம் | .. | 40 |

அட்டைப் படம்-
(போட்டோ) N. ராமகிருஷ்ணா
செய்திகள் - 2 - அட்டை:

பேனா நண்பர்கள் - 3 - அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

---

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## ஐயோ, பாம்பு!

திருவள்ளூரில் ஒரு வக்கீல் வீடு: காலை நேரத்தில் வீட்டுத் திண்ணையில் ஒரு கட்சிக்காரர் வந்து உட்கார்ந்திருந்தார். அவருக்குத் தம் வழக்கைப் பற்றியே விசாரம்.

வக்கீல் இன்னும் வரவில்லை.

அப்போது கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. வீட்டுக்குள்ளிருந்து வக்கீலின் மனைவி வெளியே எட்டிப் பார்த்தாள். பளிச்சென்று குங்குமத்தோடு லக்ஷ்மியைப் போலத் தோற்றமளித்தாள் அந்த அம்மாள். ஒரு கணம் திண்ணையைப் பார்த்தாள். உடனே அடுத்த கணம்—

"இந்தா, யாரையா அது? காலையில் திண்ணைமேல் வந்து ஜோராக உட்கார்ந்துவிட்டது? கீழே இறங்கையா! உம்; கீழே இறங்கையா என்றால் உடனே இறங்கு!" என்று அதட்டினாள்.

அந்த அம்மாள் போட்ட சத்தத்தில் கட்சிக்காரர் நடுங்கிப்போய், திண்ணையை விட்டுக் கீழே இறங்கி விட்டார்.

கட்சிக்காரர் கீழே இறங்கிய பிறகு, "அதோ, அங்கே என்ன பாரும்!" என்று தன் கையைச் சுட்டிக் காட்டினாள். அந்தக் கட்சிக்காரர் உட்கார்ந்திருந்த இடத்திற்கு மேலே, அந்தத் தாழ்ந்த வீட்டின் இறப்பிலிருந்து ஒரு நல்ல பாம்பு தொங்கிக்கொண்டிருந்தது!

இரண்டொரு நிமிஷத்தில் அங்கே ஆட்கள் கூடி, பாம்பைப் பிடித்துக் கொன்றுவிட்டனர்.

"ஐயா, நான் உங்களை அதட்டிப் பேசிக் கீழே இறக்கிவிட்டதற்காக மன்னிக்கவும். நான் மட்டும், 'பாம்பு, பாம்பு!' என்று கத்தியிருந்தால் நீங்கள் நிச்சயம் எழுந்து நின்று பாம்பின் வாயிலேயே தலையைக் கொடுத்திருப்பீர்கள். அதைத் தடுக்கவே உங்களை அதட்டிக் கீழே இறக்கினேன்" என்று கட்சிக்காரரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள் வக்கீலின் மனைவி.

"இல்லை, இல்லை. உங்கள் சமயோசித புத்தியால்தான் நான் பிழைத்தேன்" என்றார் கட்சிக்காரர், நன்றியுடன்.

—தம்பி.

# குழந்தைகளே!

கண்ணனில் ஒரு சித்திரப் போட்டி நடத்தினோம். அந்தப் போட்டியில் பல குழந்தைகள் கலந்து கொண்டார்கள். அதில் வயது வாரியாக ஆறு குழந்தைகள் பரிசு பெற்றார்கள். அந்தப் படங்களை அடுத்து வர இருக்கும் தீபாவளி மலரில் வெளியிடலாம் என்று இருக்கிறோம். சாதாரண இதழ்களில் வெளியிடுவதைவிட மலரில் வெளியிடுவதே பொருத்தமாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

ஆமாம், கண்ணன் தீபாவளி மலர் உண்டா என்று நீங்கள் கேட்கத் தொடங்கு முன்பே, இதைச் சாக்கிட்டு நானே உண்டு என்று சொல்லிவிட விரும்புகிறேன். ''தீபாவளி உண்டா இந்த வருஷம்?'' என்று யாராவது கேட்பார்களா? அதே போலத்தான் ''மலர் உண்டா?'' என்று கேட்பதும். நிச்சயமாக உண்டு என்பதை உங்களுக்கு முன்னால் சொல்லிவிடுவது நல்லதல்லவா?

தொடர்கதைப் போட்டிக்குக் கதைகள் இன்னும் வந்துகொண்டிருக்கின்றன. முடிவுத் தேதிக்குள் இன்னும் சில வரும் என்று எதிர்பார்க்கிறேன். இலங்கையில் உள்ள குழந்தைகள் ஒரு சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறார்கள். அதாவது தேர்ந்தெடுக்கப்படாத கதைகளை எப்படித் திரும்பப் பெறுவது என்று. அவர்களால் போதிய தபால் தலை வைத்து அனுப்பமுடியாது. காரணம் அந்த ஊர்த் தபால் தலை இந்த ஊரில் செல்லாது. ஆகவே எப்படித் தபால் தலை வைத்து அனுப்புவது என்பதே அவர்கள் கேள்வி.

இதற்குச் சங்கடப்பட வேண்டியதே யில்லை. அவர்கள் தபால் தலை வைக்க முடியாததற்காகக் கஷ்டப்பட வேண்டியதில்லை. அவர்கள் அனுப்பும் தொடர்கதைகளுக்கு ஒரு நகல் வைத்துக்கொண்டால் போதும். நகல் பிரதி ஒன்று அவர்களிடமே இருந்துவிட்டால் இங்கே அனுப்பும் பிரதி பரிசு பெற்றால் பெறட்டும்; இல்லாவிட்டால் இருந்துவிட்டுப் போகட்டும் என்று இருந்துவிடலாம்.

புத்தகம் வேண்டுபவர்கள்கூட அப்படித்தான் தெரியாத்தனமாக, இலங்கைத் தபால் தலைகளை வாங்கி வைத்து அனுப்பி விடுகிறார்கள். அந்தத் தபால் தலைகள் இந்தியாவில் செல்லுவதில்லை. அதனால் புத்தகமும் அனுப்ப முடியாமல் போய்விடுகிறது. புத்தகத்தை வி. பி. பி. மூலமாக வரவழைத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஒவ்வொரு புத்தகமாக வரவழைக்காமல், கூடுமான வரையில் மொத்தமாக நாலைந்து புத்தகங்களாகச் சேர்த்து வரவழைத்துக் கொள்வதே லாபம்.

கண்ணனில் பேனா நண்பர்கள் பகுதியை அச்சிட்டு வருகிறோம். பலர் மாதமாதம் பேனா நண்பர்களாகச் சேருகிறார்கள். பத்திரிகையில் பேர் வந்தால் போதும் என்று சிலர் சேருவதாகப் புகார்கள் அடிக்கடி வருகின்றன. இந்தப் புகார்களுக்கு இடம் கொடாமல், நீங்கள் நடந்து கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். யாராவது வெகு தூரத்திலுள்ள இடங்களிலிருந்து உங்களுக்கு முக்கியமான கடிதம் எழுதினால், அவசியம் அதற்குப் பதில் எழுதவேண்டியதுதான் முறை. நட்பு என்பதைச் சுலபத்தில் வளர்த்துவிட முடியாது. அதைச் சரியான படி போஷித்து வளர்ப்பது நல்லது. பேனா நண்பர்கள் பகுதியை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

[illegible] உங்கள் கருத்துக்களையும் யோசனைகளையும் எழுதி அனுப்பும்படி கேட்டிருந்தேன். பலர் எழுதி யனுப்பியிருக்கிறார்கள். [illegible] போதாது. நீங்கள் அத்தனை பேரும் எழுதவேண்டும். அடுத்த இதழிலிருந்து இந்தக் கடிதங்கள் கண்ணனில் வெளிவரும்.

ஆசிரியர்

# இந்தக் கொடி

ஆர். சரஸ்வதி




ஒன்பதாண்டு முன்னதாய்
இந்தத் தேதி தன்னிலே
அந்நியர்கள் நம்மை நாம்
ஆள உரிமை தந்தனர்.



நாட்டை விட்டு ஆங்கிலக்
கூட்டம் கப்பல் ஏறின;
கோட்டைமீது அந்நியர்
கொடி அகற்றப் பட்டன.



கொடி அகன்று போனதும்
கொடுமை யாவும் நின்றன;
அடிமை வாழ் வகன்றது
ஆளும் உரிமை வந்தது.



ஆளும் உரிமை வந்ததும்
அன்னையை வருத்திய
தாள்விலங் கறுந்து நம்
தாழ்வகன்று போனது.



அன்னே கையில் ஓர்கொடி
அன்பு ஒளியை வீசிநம்
இன்னல் தீர்த்து வைத்தது;
இன்பம் சேர்த்துத் தந்தது.

காந்தி தந்த கொடிஅது
கடமை காட்டும் கொடிஅது;
சாந்தி சொல்லும் கொடிஅது
சத்தியத்தின் கொடி அது.



உரிமை தந்த கொடிஅது
உலகு வாழ்த்தும் கொடிஅது;
வறுமை ஓட்டி நம்மையே
வாழவைத்த கொடி அது.



ஆள உரிமை தந்தநம்
அன்னேயின் கொடி இதைத்
தாள் பணிந்து வாழ்த்துவோம்
தலே குனிந்து வணங்குவோம்.

உரிமை வந்த நாளிதில்
உள்ளன்போடு நாமெலாம்
உரிமைகாட்டும் கொடியிதைப்
பெருமையோடுபோற்றுவோம்.



ஆர்வி

புத்தம் புதிய கார்; புது வருஷத்து மாடல்; பளபள வென்று டால் அடித்துக்கொண்டு சத்தம் கித்தம் போடாமல் வழவழ வென்று சாலையிலே வழுக்கிக் கொண்டு ஓடியது.

சீனன் ஆசை தீர, பின்ஸீட் மெத்தையில் தொப்பென்று குதித்தான். ஸ்பிரிங் வைத்த மெத்தை தூக்கித் தூக்கிப் போட்டது அவனை. ஆனல் பின்னல் உட்கார்ந்துகொண்டு போவது அவ்வளவு சுகமாகப் படவில்லை. எனவே வண்டியை நிறுத்தச் சொல்லி, முன் பக்கத்தில், டிரைவருக்கு அருகே போய் உட்கார்ந்து கொண்டான்.

கால் தேயத் தேய நடந்த நடைப் பாதையெல்லாம் அவனை ஏக்கத்தோடு பார்ப்பது போல இருந்தன. எட்டிப் பார்த்த கூவம் நதிப் பாலம் ஏங்கிப் போய்ப் பார்த்தது. நெரிசலில் இடித்த கூட்டம், காலை விழுங்கப் பார்த்த சாக்கடைப் பொந்து, ஏமாந்தால் சறுக்கிவிடத் துடித்த பழத் தோலிகள், தோளிலும் தலையிலும் சாமான்களைச் சுமந்து, காதைச் செவிடாக்கிய சில்லறை வியாபாரிகளின் கூச்சல் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே அவன் பாரிஸ் முனை வரையில் போனன். இத்தனை ஜனக் கூட்டத்திலே அவன் யாரைப் பார்க்க விரும்பினனே, அவனை மட்டும் காணவில்லை. திடீரென்று அவனுக்குப் பழைய ஞாபகம் வந்தது. அந்த ஷங்கங் ஹைகோர்ட்டுப் படிகளில்தான் தங்கியிருப்பான்!

''சாபர்! வண்டியைக் கோர்ட்டுக்கு உள்ளே கொண்டு போகலாமா?'' என்றான் சீனன்.

அவனுக்கே தன் குரலைக் கேட்டு என்னவோ போலிருந்தது. வேறு யாரோ ஒருவருடைய அதிகாரக் குரலைக் கேட்பது போலிருந்தது. நாலு நாள் முன்பு இருந்த சீனனுக்கு, இந்த அதிகாரக் குரல் ஏது? பணம் வந்துவிட்டது என்றால் என்ன என்றுகூட இன்னும் அவனுக்கு அநுபவம் ஏற்படவில்லை. அதற்குள்ளேயா இத்தனை தெம்பு, தைரியம், திண்மை! திடீரென்று முன்பின் பேசியறியாத புதிய புதிய வார்த்தைகள் எல்லாம்கூட, ''நான் நான்-என்னைச் சொல்லு, என்னைச் சொல்லு!'' என்று அவன் நாவிலே வந்து குதித்தன,

''சாபர்!'' — திரும்பாமலே அழைத்தான் சீனன்.

''எஜமான்!''

சீனன் உடனே திரும்பி, "இங்கே பார், மான். அந்த எஜமான், இஜமான் பேச்செல்லாம் வேண்டாம். பாரிஸ்டர் கூப்பிடருப்பலே, 'மாஸ்டர்' என்று கூப்பிட்டால் போதும். அதான் காதுக்கு நல்லா இருக்கு; என்ன?"

"சரி, மிஸ்டர்!"

"மிஸ்டர் இல்லே மான், மாஸ்டர், சொல்லு, மாஸ்டர்!"

"மாஸ்டர்!"

"ஆங்..அதான் .. வண்டியை உள்ளே கொண்டு வந்திட்டியே, சரி; போய், அந்தப் படிக்கட்டு ஓரமா நிறுத்து. சிலைக்குப் பக்கத்திலே மண்டபம் மாதிரி ஒரு இடம் இல்லே, அங்கே யாராவது ஒரு பையன், கொஞ்சம் பூனைக் கண்ணா, கையிலே ஒன்றீனா இரண்டிரீனா தட்டுக்கூடை வச்சிக்கிட்டு இருக்கானா, பார்! இருந்தா, பேர் என்னான்னு கேளு; ஷங்கன்னு சொன்னா உடனே இங்கே அழைச்சுக்கிட்டு வா! ஷங்கங்; எங்கே சொல்லு, ஷங்கங்!"

"ஷங்கங்!"

"ஆங்..போய்ப் பாரு; போ; ஜல்தி வரணும்."

"சரி மாஸ்டர்!" என்று தலையைப் பணிவாக ஆட்டிவிட்டு, டிரைவர் லைட்ஹவுஸ் படிக்கட்டுப் பக்கம் போனான்.

சீனனோ, அந்தக் காருக்குச் சொந்தக்காரனாக இருப்பவன் எப்படி உட்கார வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்பவன் போல் பல கோணங்களில் உட்கார்ந்து, ஒத்திகை பார்த்துக்கொண் டிருந்தான்.

"ஹலோ, மாஸ்டர் சீனன்! எங்கே இப்படி!" என்று பின்னால் ஒரு குரல் கேட்டது.

அங்கே பாரிஸ்டர் வேதாசலம், தம் காரிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்திலே இருபது, இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க வாலிபன் ஒருவன் வந்துகொண்டிருந்தான். அவனுடைய தோற்றத்தையும் ஆடையையும் கண்டு, சீனனுக்குப் புதுமையாக இருந்தது. கப்பல் மாலுமியின் உடை. அதாவது பான்டும், பனியனும் மட்டும்! தலையிலே தொப்பி இல்லை. அழகான கிராப்புத் தலையை அவன் வாராதபடி விட்டிருந்தான். நீலப்பட்டை போட்ட பனியன், அவனுக்கு எடுப்பாக இருந்தது. ஆனால் ஒன்றுதான் கொஞ்சம்





குறையாகப் பட்டது சீனனுக்கு. அது அவன் முகம்!

ஆள் என்னவோ ஜோராகத் தான் இருந்தான். ஆனால் முகத்திலே கண், பார்வை, வாய், கன்னம் எல்லாம் ஏதோ ஒரு முதிர்ச்சியைக் காட்டின. இளைஞர்களுக்கு வேண்டிய மினுமினுப்புக்குப் பதில் ஏதோ ஒரு குழப்பம் இருந்தது. அதுவே அவன் பல விஷயங்களில் மிதமிஞ்சிய பழக்கங்கள் உள்ளவன் போல் காட்டியது.

ஒரு சில விநாடிதான் சீனன் அவனைக் கவனித்தான். அவனும் அந்தச் சில விநாடிகளில் சீனனைக் கவனித்துக் கொண்டான்.



''இது யார் தெரியுமா?'' என்றார் பாரிஸ்டர், அவனைப் பார்த்து.

அவனுக்குத் தமிழ் தெரியாது போலிருந்தது. பார்த்தால் கிட்டத்தட்ட அவன் சைனாக்காரனைப் போலத்தான் இருந்தான். சின்னக் கண்; கொஞ்சம் லேசாகச் சப்பை மூக்கு; 'தெரியாது' என்பது போல அவன் தலையை ஆட்டினான்.

பாரிஸ்டர் வேதாசலம் சிறிது நேரம் ஏதோ யோசனை செய்வது போலத் தயங்கினார்.

''உனக்குத் தெரியுமா, மாஸ்டர், இவனை!'' என்று தமிழில் கேட்டார் சீனனை.

''ஹூம்.. எனக்கு எப்படித் தெரியும்? நான் முன்னே பார்த்ததே யில்லையே!'' என்றான் சீனன்.

''சரி; நல்லதாப் போச்சு; நீ அவனைத் தெரிஞ்சு கொண்டாலும் அவன் உன்னைத் தெரிஞ்சுக்காமல் இருக்கிற வரையில் சந்தோஷம்! சரி; நான் அப்புறம் வர்றேன். அல்லது அவசரமாக இருந்தா நீ வா, நான் வரட்டுமா? எல்லாம் அப்புறம் சொல்றேன்'' என்று சொல்லிக்கொண்டே, ''கமான் மிஸ்டர் கிங் கிங்!'' என்று அந்த வாலிபனை அழைத்துச் சென்றார்.

'நல்ல பேருடா, இவங்களுக்கு! சுங்கிங்-கங்குங்-கிங்கிங் என்று! நம்ப ஷங்கங்கைக்கூட இனிமே பேரை மாத்திக்கச் சொல்ல வேண்டியதுதான்!' என்று எண்ணும் போதே அவனுக்கு உள்ளூற ஏதோ ஒன்று குத்துவதுபோல இருந்தது. 'கிழவருடைய தம்பி மகன்! முன்பு பாரிஸ்டர் கேட்டாரே கிழவரை, அந்தத் தம்பி மகன் இவன்தான் போலிருக்கிறது! அவனுக்குக் கிடைக்க வேண்டிய இந்த அதிருஷ்டம் எனக்கு வந்துவிட்டது. அப்படியானால்..' என்ற நினைவு, விவரம் இல்லாமல் அவன் மனத்தை என்னவோ வேதனை செய்தது.

ஆனால் இரண்டு கால் பாய்ச்சலில், ''அடே சீனு!'' என்று தூரத்திலிருந்தே பார்த்துவிட்டு, கூவிக்கொண்டே ஓடிவந்தான் ஷங்கங். கையிலே கலகலவென்று தட்டுச் சாமான்கள் உருண்டன.

''ஏறுடா வண்டியிலே!'' என்றான் சீனன்.

''யார் வண்டிடா இது?'' என்று வாயைப் பிளந்தான் ஷங்கங்.

அதற்குமேல் ஷங்கங்குக்கு உண்மை தெரியும் வரையில் நடந்தவற்றை விவரிப்பது அவசியமேயில்லை. பிட்சாதிபதி லட்சாதிபதி ஆனால் எப்படியோ, அந்தக் கதைதான். சுருக்கமாகச் சொன்னால், ஷங்கங்குக்கு ஏற்பட்ட அந்த அதிர்ச்சியில் அப்படியே கூடையைத் தரையில் போட்டுவிட்டு, கீழே விழுந்து புரண்டுவிட்டான். அந்தப் புழுதி அழுக்கோடு எழுந்து சீனனைக் கட்டிக் கொண்டான். இத்தனைக்கும் சீனன் முழு விவரங்களும் சொல்லிவிடவில்லை. அதை

யெல்லாம் டிரைவரையும் வைத்துக்கொண்டு சொல்லலாமா?

ஷங்கங் கூடையையும் தூக்கிக்கொண்டு பின்ஸீட்டில் ஏறி உட்கார்ந்துகொண்டான். சீனனும் அவன் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டு, ''சாபர்! வண்டியிலே பெட்ரோல் நிறைய இருக்கா?''

''இருக்கு, மாஸ்டர்!''

''இப்ப மணி என்ன? பத்தே முக்கால்; இல்லையா? முதல்லெ பஸ்ட் கிளாஸ் டிரஸ் ஷாப்புக்குப் போ! அப்புறம் நியூ இந்தியா கேப்! அதுக்கப்புறம் வண்டி ஒரு இடத்திலே நிக்கப்படாது. போன வழியாப் போகப்படாது. பாக்காத இடம் இருக்கப்படாது. போகிற வழியிலேயே பெட்ரோல்; போகிற வழியிலே எது வேணுமோ அது..எங்கே.. இரண்டரை மணிக்குத்தான் நம்ப ஹோட்டலுக்குத் திரும்பணும்!'' என்று சீனன் வெகு டாம்பீகமாக உத்தரவு கொடுத்தான்.



ஷங்கங் வாயைப் பிளந்தபடி இதையெல்லாம் ஆனந்தம் தாங்காமல் கேட்டுக்கொண்டே உட்கார்ந்திருந்தான். முதலில் ஷங்கங்குக்கு வேண்டிய ஆடைகளைப் புத்தம் புது மோஸ்தரில் வாங்கினான் சீனன். அவன் எடுத்துப் போடுவதைப் பார்த்தால் ஷங்கங்குக்கே பயமாக இருந்தது. தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு நின்றான். சீனன் அவன் காதோடு, ''டேய் அசட்டு முட்டாள். வையடா கீழே? ஆள் இருக்கான்; தூக்கிக்கொண்டு வைக்கிறான். நீ ஏண்டா தூக்கறே! போய், அந்தப் பிரைவேட் ரூம்லே ஒரு செட் டிரஸ்ஸை மாட்டிக்கிட்டு வாடா முதல்லே!'' என்றான்.

''ஏண்டா, முந்திப் பிந்தி செத்திருந்தாத்தானேடா இதெல்லாம் தெரியும்!'' என்று ஷங்கங் சிரித்துக்கொண்டே சொன்னான். சீனன் டிராயர் பையிலே ஒரு கத்தை புத்தம் புதிய பத்து ரூபாய் நோட்டு வைத்திருப்பதைப் பார்த்து அவனுக்கு மூச்சே நின்றுவிடும்போலிருந்தது.

பிறகு எப்படியோ டிரஸ் போட்டுக் கொண்டு ஜம்மென்று வந்தான். அப்புறம் ஹோட்டலுக்குப் போனார்கள். டிரைவரையும் சாப்பிடச் சொல்லிவிட்டு அவர்களும் பெயர்-ருசி தெரியாததையெல்லாம் கேட்டு வாங்கித் தின்றார்கள். முடியாததை எறித்துவிட்டார்கள்.

அதற்கும் பிறகு ஊர் சுற்றும் படலம் ஆரம்பமாயிற்று.

''சாபர்! வண்டி இந்த மாதிரி ஸ்லோவாகப் போகக்கூடாது...இன்னும் கொஞ்சம் ஸ்பீடாகப் போகணும்!'' என்றான் சீனன்.

''சரி மாஸ்டர்!'' என்றான் சாபர். வண்டி சுகமாகப் போய்க் கொண்டேயிருந்தது. ஷங்கங் தொணதொணப்பான் போல இருந்தது. ''உஷ்...பேசாதே டிரைவர் இருக்கும்போது நாம் கேவலமாக எதுவும் பேசிக்கப் படாது!'' என்று அவனை அடக்கி விட்டான் சீனன்.

''இரண்டரைக்கு ஹோட்டல்; அரை மணி ரெஸ்ட்! பதினைந்து நிமிஷத்தில் குளிச்சுப்புட்டு வேறு டிரஸ் பண்ணிக்க தேண்டியது. உடனே ஸ்லேட்டா ஒரு லஞ்ச்! சரியா மூன்றரை-டார்ஜான் பிக்சர் பாலஸ்! இதுதான் நம்ப பிளான் இன்னிக்கு'' என்றான் சீனன்.

''ரைட்டோ, பலே பலே, அச்சா - அருமை - ஹே!'' என்றான் ஷங்கங்.

அதே போல வண்டி சென்னையில் ஓர் இடம் பாக்கி விடாமல் சுற்றிவிட்டு, சைனா சு-சூவுக்குத் திரும்பும்போது மணி இரண்டு இருபத்தொன்பது!

வண்டி வந்து நின்றதும் ஹோட்டல் சிப்பந்தி ஒருவன் ஓடோடி வந்து வண்டியின் கதவைத் திறந்து விட்டான்.

அவர்கள் இருவரும் இறங்கியதும், அவன் போலீஸ் சலாம் போல ஒன்றை விறைப்பாகப் போட்டான்.

சீனன் இந்த உலகமே லட்சியமில்லாததுபோல் தன்னுடைய ஏர் கண்டிஷன்டு அறைக்குள் நுழைந்தான். ஷங்கங் பேசுகிற நிலையில் இல்லை. அவனுக்கு மூர்ச்சை போடவில்லை; அவ்வளவு தான்.

அவர்கள் திட்டப்படி எல்லாவற்றையும் செய்துவிட்டு, மீண்டும் சினிமாப் பார்க்கப் புறப்பட்ட போது, எதிரே ஓர் அறை திறந்து மூடிக்கொண்டதுபோல இருந்தது சீனனுக்கு. ஷங்கங்கூட அதைக் கவனித்தான்.

''யாருன்னு கவனிச்சியா?'' என்று கேட்டான் சீனன்.

''முகம் சரியாத் தெரியல்லே. ஆனா, கோர்ட்டிலே பார்க்கல்லே, அவன் மாதிரி இருக்கு!'' என்றான் ஷங்கங்;

''சரி; சரியாகப் பூட்டிக் கொண்டு வா!'' என்று சாவியை ஷங்கங்கிடம் கொடுத்து விட்டு நின்றான். ஷங்கங் நன்றாகப் பூட்டி, காலால் உதைத்து இழுத்துப் பார்த்துவிட்டுத்தான் திருப்தியடைந்தான்.

ஆனால் கார் வாசல் போர்ட்டிகோவில் வந்து நிற்கும் சமயத்துக்கு இவர்கள் எங்கே வந்தார்கள்!

அவர்கள் வேறு யாருமில்லை. சிங்கப்பூர் சின்னப் பக்கிரியும் அவனுடைய மனைவி காளியாத்தாளும் ஆளுக்கொரு பக்கமாக வந்து, வாசலில் வண்டியின் எதிரில் நின்றார்கள்!

(தொடரும்)



# மன்னன் திரும்பினான்

ஆர். என். ராஜன்

புத்தபிரான் நாடெங்கும் சென்று தம் உபதேச மொழிகளை மக்களுக்கு எடுத்துச் சொன்னார். மாரிக்காலம் தவிர மற்ற எல்லா நாட்களிலும் அவர் இது போல் செய்து வந்தார். அவருடன் சில புத்த பிக்ஷுக்களும் செல்வது வழக்கம். அவரது உபதேச மொழிகளைக் கேட்ட மக்கள் பலரும் உண்மை தெரிந்தவர்களாக அவரைப் பெரிதும் போற்றிப் பாராட்டினர். அவரிடம் அன்பும் கொண்டனர். மக்களிடையே அவருக்குச் செல்வாக்கு வளர்ந்து வருவதைக் கண்ட சிலர் அவர்மீது பொறாமை கொண்டார்கள். மக்களை ஏமாற்றிப் பிழைத்து வந்தவர்களுக்கு இவருடைய உபதேச மொழிகள் இடையூறுகள் விளைவித்தன.

புத்தர்பிரான் மக்களுக்கு நன்மையைப் போதிக்கும்போதெல்லாம் அதை விளக்கக் கதைகள் பலவும் சொல்லுவார். அவைகள் எல்லாம் சும்மாப் பிறரை மகிழ்விக்கக் கூறும் கதைகள் அல்ல. அவர் தம் முன் பிறப்புக்களில் அவதரித்து மக்களுக்குப் புரிந்த நன்மைகளையே இப்போது கதைகளாகச் சொல்லி வந்தார். முன் பிறப்புக்களில் அவரைக் குறிப்பிட போதிசத்துவர் என்றே அழைத்து வருகிறோம்.

கங்கை நதிக் கரையிலே பிரமாண்டமான மாமரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தின் பழங்களில் காணப்படும் அழகும் மணமும் இனிப்பும் இவ்வுலகிலேயே வேறு எங்கும் கிடையாது என்று சொல்லிவிடலாம். அந்த மரத்தில் எண்ணூறு குரங்குகள் வசித்து வந்தன, அந்தக் கூட்டத்துக்குத் தலைவனாக போதிசத்துவர் அவதரித்திருந்தார்.

அந்த மரத்தின் கிளைகளில் ஒன்று நதிப் பக்கம் நீண்டு வளர்ந்திருந்தது. போதிசத்துவர் இதைக் கவனித்தார். பிறகு குரங்குகளையெல்லாம் ஒன்றுகூட்டி அவைகளிடம், "இந்தக் கிளை, நதிப் பக்கம் நீண்டிருக்கிறது. இந்தப் பழங்களில் ஏதேனும் சில பழுத்து ஆற்றில் விழுந்தால் வெள்ளம் அவைகளை நகர்ப்புறத்துக்கு அடித்துச் செல்லும். அங்கே யாரேனும் இதைப் பார்த்துப் புசித்து ருசி கண்டு விட்டார்களானால் பிறகு சும்மா இருக்க மாட்டார்கள்.

---



காரின் முதலாளி: (கோபத்துடன்) ஏன் தம்பி, நீ இதற்கு முன்பு காரையே பார்த்ததில்லையோ, ரொம்ப நாழியாக உற்று உற்றுப் பார்க்கிறியே?

பையன்: (நிதானமாக) ஊஹ்ூம். பழைய மாடல் இப்போ எங்குமே அகப்படுவதில்லை. அதனால்தான்!

—ஜி. நடராஜன்.

மரத்தைத் தேடிக் கண்டுபிடித்து நமக்குத் தீமை விளைவிக்க ஆரம்பித்து விடுவார்கள். ஆகையால் இந்தக் கிளைகளிலுள்ளவைகள் பழுக்குமுன் ஒன்றுவிடாமல் ஆற்றில் விழாதபடி பறித்துத் தின்று விடுங்கள்'' என்று சொன்னர். அவைகளும் அப்படியே செய்தன.

ஆனல் ஒன்று மட்டும் இலைகளுக்கிடையே மறைந்திருந்ததால் அது அவற்றின் கண்களுக்குப் புலப்படாமலிருந்து விட்டது. அது பழுத்துத் தண்ணீரில் விழுந்தது. வெள்ளத்தால் அடித்துச் சென்று, கங்கை நதியில் வழக்கம் போல ஸ்நானம் செய்து கொண்டிருந்த காசி ராஜன் கையில் கிடைத்தது. அவன் அதன் ருசியைக் கண்டதும் உடனே சேவகர்களை அனுப்பி, அந்த மரம் இருக்கும் இடத்தைத் தெரிந்துகொண்டு வரும்படி உத்தரவு இட்டான். அவர்கள் ஆற்றின் கரையே வெகு தூரம் சென்று மரத்தைக் காணமல் திரும்பிச் சென்றனர்.

இதைக் கேட்ட அரசன் ஒரு படையுடன் அவனே அந்த மரத்தைத் தேடிக் கண்டு பிடிக்கக் கிளம்பி விட்டான். வெகு நாட்களுக்குப்பின் கங்கைக் கரையிலிருந்த அந்த மரத்தை அடைந்தான். அங்கே குரங்குக் கூட்டம் ஒன்று வசிப்பதைக் கண்டான். குரங்குகள் பழங்களைத் தின்று கொண்டிருந்தன.

அரசன் அந்த மரத்தைத் தன்னுடைய பாதுகாப்பில் வைத்துக் கொள்ள எண்ணி அந்தக் குரங்குகளை யெல்லாம் கொன்று தள்ளும்படி உத்தரவிட்டான்.

இதையறிந்த குரங்குகள் மிகவும் வருத்த மடைந்தன. உயிருக்கு ஆபத்து வந்துவிட்டதை எண்ணி செய்வதறியாமல் விழித்தன. அருகே அவைகள் வசிக்க ஏற்ற மரம் எதுவும் இல்லை. எதிர்க் கரையில் மட்டும் ஒரே ஒரு மரம் இருந்தது. ஆனல் அங்கே எப்படிச் செல்வது? இந்த மரத்திலிருந்து அந்த மரத்துக்குத் தாவிப் போய் விடலாமென்ருல் தூரம் கொஞ்சம் அதிகமாக இருந்தது. ஆற்றில் குதித்துச் செல்லலாமென்ருலும் சுழலும் வேகமும் அதிகமாக இருந்தது. கீழே சிப்பாய்கள் அவைகள் மீது அம்பு எய்வதற்கு ஆயத்தம் செய்துகொண் டிருந்தார்கள். இந்த நிலையில் குரங்குத் தலைவனை போதிசத்துவர் மற்றவைகளைப் பார்த்து, ''கவலைப் படாதீர்கள். அவர்கள் இப்போதுதான் தயார் செய்கிருர்கள். அதற்குள் நீங்கள் அனைவரும் தப்பிவிடலாம். அதற்கு ஒரு வழி செய்கிறேன்'' என்று சொல்லி, 'குபீர்' என்று தண்ணீரில் பாய்ந்து நீந்தி அக்கரையை அடைந்தது. அங்கே நீண்ட மூங்கில் ஒன்றை





வெட்டி வந்து, ஒரு முனையை அந்தக் கரையிலுள்ள மரக் கிளையில் கட்டிற்று. மற்றொரு முனையைத் தன் இடுப்பில் கட்டிக் கொண்டது. பிறகு இக் கரையிலுள்ள மாமரத்துக்கு ஒரே தாவாகத் தாவியது. அப்பா! நல்ல வேளை!! கிளையைக் கையில் எட்டிப் பிடித்துவிட்டது. ஆனால் ஒரு குறை! மூங்கில் இன்னும் ஒரு முழம் நீளமாக இருந்திருந்தால் இரு மரங்களுக்கும் பாலம் போட்டது போல ஆகிவிடும். குறைவாக இருந்ததால், பாவம்! போதிசத்துவர் அந்தக் கிளையை, கை நோக உடல் நோக எட்டிப் பிடித்தபடியே இருந்தார். குரங்குகள் எல்லாம் அவர் வழியாக மூங்கிலை அடைந்து அக்கரைக்குச் சென்றன.

கடைசியில் ஒரு குரங்கு மட்டும் பாக்கி இருந்தது. போதி சத்துவருக்கு வர வர, கைகால்கள், உடல் எல்லாம் சோர்ந்து போய் விட்டன. இருந்தும் என்ன? விடாப் பிடியாகக் கையை விடாமல் பிடித்துக்கொண்டிருந்தார். இந்த நிலையில் கடைசியாக இருந்த குரங்குக்கு, போதிசத்துவர் மீது பொறாமை போலும். இவர் இறந்து போனால் தலைமைப் பதவி தனக்குத்தானே கிடைக்கும் என்று எண்ணியது. ஆகையால் பாதித் தூரம் தாண்டிச் சென்றதும் மூங்கிலில் இருந்தபடியே ஒரு தரம் ஜோராகக் குலுங்கி எதிர்க்கரை மரத்துக்குத் தாவியது. போதி சத்துவரின் இடுப்பில் கட்டியிருந்த கட்டு தளர்ந்து மூங்கில் அவிழ்ந்து எதிர்க்கரை மரத்துடன் தொங்கியது. போதிசத்துவர் உணர்வற்று மாமரக் கிளையிலிருந்து அப்படியே கீழே விழுந்தார்.

அரசன் இவை எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்தான். கடைசியில் அவன் மனம் இளகியது. உடனே சேவகர்களைக் கூப்பிட்டு போதி சத்துவருக்கு உதவி செய்யும்படி உத்தரவிட்டான். ஆனால் என்ன பயன்! போதிசத்துவரைக் காப்பாற்ற முடியவில்லை. பிறருக்காகத் தன் உயிரையே கொடுத்து உதவிய அந்தப் பிராணியின் (போதிசத்துவரின்) தியாகத்தைக் கண்டதும் மன்னனின் மனம் மாறியது. அதே இடத்தில், ''இனி மேல் எந்தப் பிராணியையும் துன்புறுத்துவதில்லை'' என்று உறுதி கொண்டு சேவகர்களுடன் தன்னுடைய ராஜ்யத்திற்குத் திரும்பிச் சென்றான்.

இந்தக் கதையைப் படித்த பின்னர் உங்கள் மனமும் பரிதாபப் படுகிறதா? நீங்களும் அந்த மன்னன் செய்ததுபோல் நம் நாட்டின் அஹிம்ஸா தத்துவத்தை உணர்ந்து அதைக் கடைப்பிடிக்க உறுதி கொள்ளுங்கள்.

# அதிருஷ்டம்

**ப. ரா.**

ஒரு வேலைக்கும் உதவாதவன் என்று பெயர் வாங்கிய முனிசாமி கடைசியாகப் பட்டாளத்தில் போய்ச் சேர்ந்தான். அங்கே யாவது அவன் நல்ல பெயர் எடுத்தானு என்று கேட்கிறீர்களா? அது தான் கதை. கேளுங்கள்.

வயது, உயரம், நிறை எல்லா வற்றையும் பரிசோதித்ததில் முனிசாமி தேறி, சைன்னியத்தில் சேர்த்துக்கொள்ளப் பட்டான். அவனது மூளையின் அளவையும் எடுத்துப் பார்த்திருந்தால் நலமாயிருந்திருக்கும் என்று சில அதிகாரிகள் கருதினர். வந்ததும் வராததுமாகத் தன் அபாரமான புத்திகூர்மையை அவன் பல விதங்களில் வெளிப்படுத்திக் கொண்டதுதான் அதற்குக் காரணம். சிப்பாயாக இருந்தவனைக் கீழிறக்கி, சமையல் முதல் சலவை வேலை வரையில் வைத்துச் சோதித்துப் பார்த்து விட்டார்கள். எதிர்பார்த்த எந்த வேலையிலும் அவன் உருப்பட வில்லை, அவனது கை பட்ட வேலை யும் உருப்படவில்லை.

இறுதியில் எஞ்சியது ஒரே இலாகாதான். பட்டாளத்துப் பசு மாடுகளை மேய்க்கும் பணிக்கு முனிசாமியை அதிகாரிகள் அனுப்பி வைத்தனர். இங்கும் அவனது சேவை பிரயோஜனப்படா விட்டால் பிறகு, ஒன்று அவனைப் பட்டாளத்தினின்று தள்ளிவிட வேண்டும், அல்லது ஆழமாக ஒரு குழி தோண்டி உயிருடன் முழுசாகப் புதைத்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு அவர்கள் வந்ததில் ஆச்சரியமில்லை.

''அடடா! இந்த மாடு மேய்க்கும் வேலையை நம் சொந்த ஊரிலேயே செய்துகொண் டிருக்கலாமே. இதற்கா இவ்வளவு தூரம் வந்தேன்?'' என்று முனிசாமி வருத்தப்பட்டான்.

தலைவிதி அவனை மேலே தூக்கிக்கொண்டு போவதற்குப் பதிலாகக் கீழே உருட்டித் தள்ளிக் கொண்டிருந்தது.

''பரவாயில்லை, தம்பி. நீ என்ன சாதாரண மாடுகளையா மேய்க்கிருய்? பட்டாளத்து மாடுகள் அல்லவா இவை? இதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே'' என்று அவனுக்கு ஆறுதல் சொன்ஞன், அதே 'டிபார்ட்மென்டி'ல் வேலை பார்க்கும் மற்ருெருவன். ஒருவாருக முனிசாமி மனம் தேறி வேலையைக் கவனிக்கத் தொடங்கிஞன்.

அப்போது காஷ்மீரத்தில் யுத்தம் நடந்துகொண் டிருந்தது. எதிரே ஒரு மைல் தூரத்தில் பாகிஸ்தான் துருப்புக்களின் முகாம். அவ்வப்போது அவர்களுக்கும் இந்தியச் சைன்னியங்களுக்கும் கை கலப்பு நேர்வதுண்டு. எதிரியின் பலம் மிக்க கேந்திரஸ்தானங்களில் அதுவும் ஒன்று. எப்படியாவது அந்த இடத்திலிருந்து அவர்களை விரட்டிவிட வேண்டுமென இந்திய ராணுவத்தினர் பெரு முயற்சி செய்துவந்தனர்.

தன் சொந்தச் சாமர்த்தியத்தில் எப்போதுமே அபார நம்பிக்கை கொண்டிருந்த முனிசாமி நினைத்துக் கொள்வான்:- ''பூ! இது என்ன பிரமாதம்! நான் மட்டும் இங்கே தளபதியாக இருந்தால் மூன்றே நாட்களில் எதிரி போன இடத்தில் புல் முளைக்கச் செய்து விட மாட்டேனு?'' தற்சமயம் அவன் பார்த்து வந்த மாடு மேய்க்கும் வேலைக்கும் 'புல் முளைக்கச் செய்யும்' அவனது மேற்படி எண்ணத்திற்கும் ஒருகால் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கலாம்!

இப்படியாக இருந்து வரும் காலத்தில்தான் திடீரென ஒரு நாள் அந்தச் சம்பவம் நடந்தது.



பாலு: கடைசியிலே எப்படியோ நேத்து சினிமாவுக்குப் போய்ச் சேர்ந்துட்டேன்.

மணி: சினிமாவுக்கா? எப்படிச் சேர்ந்தே?

பாலு: அடே! இதிலே என்னடா கஷ்டம்? நாலணாவைக் கொடுத்து டிக்கட்டை வாங்கின, உள்ளே போகவேண்டியதுதானே!

—பி. கலாசாமி.

---

* * *

முனிசாமியின் பொறுப்பில் விடப்பட்டிருந்த பசுமாடுகளில் ஒன்றைக் காணவில்லை. ஓங்கி உயர்ந்து நன்றாகக் கொழுத்த மாடு அது. மேய்ச்சல் வெளியிலிருந்து திரும்பி வருமுன்பு அது மாயமாக மறைந்துவிட்டது.

முனிசாமி பயந்து போனான். இதைவிடப் பெரிய சோதனை ஒன்றும் வேண்டியதில்லை. மாடு கிடைக்காவிட்டால் மேலதிகாரி மிகக் கடுமையாகத் தண்டனையளிப்பது நிச்சயம். இரவுக்கு இரவே தேடித் திரிந்து அது எங்கிருந்தாலும் பிடித்துவந்து தொழுவத்தில் கட்டி விட்டாலல்தான் தலை தப்புவது சாத்தியம். எனவே மனத்தைத் திடம் செய்துகொண்டு அந்தக் கும்மிருட்டில் கிளம்பினான்.

ராணுவ முகாம், அதிலும் யுத்த காலம் என்றால் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குக் கேட்க வேண்டுமா? சேவகர்கள் கண்ணிற் படாமல் ஒளிந்து மறைந்து அவன் செல்ல வேண்டியிருந்தது. எங்கும் செறிந்து கிடந்த முட்கள், சுயேச்சையாகத் திரியும் பாம்புகள் முதலிய சகல விதமான ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் அவன் அலைந்து மாட்டைத் தேடினான். இறுதியில் அதைக் கண்டுபிடிக்கவும் செய்தான். ஒரு மேட்டில் நின்று சாவதானமாக அசைபோட்டுக்கொண்டிருந்தது பிரம்மாண்டமான அந்த மாடு. முனிசாமி ஆனந்தத்துடன் அதன் கழுத்தில் தும்பை மாட்ட முன்னேறினான்.

தன் பொருட்டு அவன் அநுபவித்த கஷ்டங்களை அந்த மாடு அறியவில்லை. அறிந்திருந்தால் அப்படி நன்றி கெட்ட முறையில் நடந்துகொண்டிராது என்பது நிச்சயம்.

முனிசாமியின் ஆனந்தமெல்லாம் ஒரு கண நேரத்துக்குத்தான். மாடு 'ஞொய்' என்ற உறுமலுடன் கொம்புகளைத் தாழ்த்திக் கொண்டு முட்ட வர, அடுத்த விநாடி தும்பைக் கீழே போட்டுவிட்டு அதற்குப் பதிலாக உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடினான் அவன். மாடு விடவில்லை. நாலு கால் பாய்ச்சலில் அவனைத் துரத்தத் தொடங்கிற்று.

போர்முனையில் பணியாற்றுபவர்கள் குறைந்தது ஒரு துப்பாக்கிக் குண்டினாலாவது காயமுற்றுத் தம் சாவைச் சந்திக்க வேண்டும். அதுதான் கௌரவம்; வீர சுவர்க்கம் செல்வதற்கான வழியும் கூட. அதை விட்டுக் கேவலம் ஒரு மாட்டின் கொம்புகளால் தூக்கியெறியப்பட்டு, அதன் கால்களின் கீழ் மிதிபட்டுச் சாவதை எந்த மனிதன் விரும்புவான்?

ஓடினான், ஓடினான், ஓடிக் கொண்டேயிருந்தான். பாழும் மாடு 'விடேன், தொடேன்' என்று துரத்திக்கொண்டேயிருந்தது. இருளில் திக்குத் திசை தெரிய

வில்லை. வெகு சமீபத்திலுள்ள பொருள்கள் மட்டும் புண்ணிய வசத்தால் மங்கலாகத் தெரிந்தன. பன்னிரண்டடி அகலமுள்ள ஒரு வாய்க்காலைத் தாண்டிக் குதித்தான்; ஐந்தடி உயரமுள்ள முள் வேலி யொன்றின் மீதும் பறந்து சென்றுவிட்டான். அதே இடையூறுகளை மாடும் அற்புதமாகச் சமாளித்துக் கொண்டு துரத்தியது.

கடைசியாகத் தரையோடு தரையாய்க் கிடந்த வஸ்து ஒன்று அவன் காலை இடறியதும் எட்டுக் குட்டிக்கரணங்கள் போட்டுக்கொண்டு தூரத்தில் போய் விழுந்தான்.

''அரே சைத்தான்!'' என்று சபித்துக்கொண்டு அந்த வஸ்து எழுந்து உட்கார்ந்தது. வஸ்துவா அது? உயிருள்ள ஒரு மனிதன்!

உட்கார்ந்தவனுக்கு விஷயம் புரியுமுன் மூர்த்தன்யத்துடன் வந்துகொண் டிருந்த மாடுதான் கண்ணில் பட்டது. முனிசாமியை விடத் தான் தைரியத்தில் குறைந்தவனல்ல என்று நிரூபிப்பது போல் அவனும் கால் போன திக்கில் சிட்டாகப் பறந்தான். ''அரே அல்லா!'' என்று அவன் அலறியது முனிசாமியின் காதில் விழாமற் போகவில்லை.

மாட்டுக்கு யாராக இருந்தால் என்ன? துரத்துவதற்கு அந்தப் புது மனிதனை நோக்கி உற்சாகமாகப் பாய்ந்தது அது.

'செத்தேன், பிழைத்தேன்' என்று முனிசாமி எழுந்தான். அந்தப் பொல்லாத மிருகத்தினிடம் அவனுக்கு அதைவிடப் பொல்லாத ஆத்திரம் ஏற்பட்டது. பழிக்குப் பழி வாங்காது விடுவதில்லை என்று துணிந்தவனாய்க் கீழே குனிந்து கல் ஒன்றைப் பொறுக்கினான். மாடு போன திக்கில் வீசினான்.

மறுகணம் உலகமே கிடுகிடுக்கும்படியாகப் 'படார்' என்ற ஓர் ஓசை. கண்ணைப் பறிக்கும் ஒளி, மூச்சு முட்டச் செய்யும் வெடி மருந்தின் நாற்றம், அத்துடன் இணைபிரியாத புகை மண்டலம். 'கேவலம் ஒரு கல்லை வீசியதன் விளைவா இது?' என்று பதறிப் போனான் முனிசாமி.






**ஒருவர்:** நம்ப பையன் கச்சேரியில் முன்னுக்கு வருவானென்று தோன்றுகிறதா?

**மிருதங்க வித்துவான்:** இப்பொழுது அவன் முன்னுக்கு வருவதைப் பார்த்தால் மேடையிலிருந்து கீழே விழுந்துவிடுவான்போல் தோன்றுகிறது.

---

அத்துடன் நின்றதா விபரீதம்? 'படார், படார்' என்று ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றாக வெடியோசைகள் கிளம்பின. இன்னும் அதிகப் புகை, அதிக நாற்றம். இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல் பிரம்மாண்டமான நெருப்பு ஜ்வாலைகள் நாற்புறமும் தோன்றி வானை முட்டத் தொடங்கின. அதன் வெளிச்சத்தில் குழப்பமுற்ற மனிதர்கள் குறுக்கும் நெடுக்குமாக ஓடுவதும் தெரிந்தது. அவர்கள் தரித்திருந்த உடையைப் பார்த்தான் முனிசாமி. அப்புறம் ஒரு கணம் கூட அங்கே தாமதிக்காமல் திரும்பி நேர் எதிர்த்திசையில் ஓடத் தொடங்கினான்.

அது பாகிஸ்தான் படைகளின் முகாம்!

இங்கே நடக்கும் ரகளை அவனது முகாமிலும் அனைவரையும் விழிப்புறச் செய்திருந்தது. எல்லோரும் தூரத்தில் நின்றபடி மேற்கண்ட வேடிக்கைகளை ரசித்துக்கொண்டிருக்கும் வேளையில் ஓடி வந்து அவர்களிடையே விழுந்தான் முனிசாமி.

* * *

அது என்ன மர்மம்? முனிசாமியின் வாயாலேயே கதையைக் கேட்ட தளபதி, தம் வீரர்களுக்கு விளக்கிச் சொன்னார்.

மாடு துரத்திவர ஓடிய முனிசாமி திக்குத் திசை தெரியாதபடியால் எதிரித் துருப்புகளின் முகாமில் பிரவேசித்து விட்டான். கடமையை மறந்து தூங்கிப் போயிருந்த ஒரு பாராச் சேவகன் மீதுதான் அவன் இடறி விழுந்தது.

சேவகன் அருகில் பாதுகாப்புக்கான சகல ஆயுதங்களும் இருந்தன. கல் என்று நினைத்து முனிசாமி எடுத்து வீசியது ஓர் எரிகுண்டு.

அந்த எரிகுண்டு அவன் விரும்பியபடி மாட்டைத் தாக்கவில்லை. அருகாமையில் இருந்த ஆயுதக் கிடங்கில் போய் விழுந்தது. உடனே அங்கே தீப்பற்றிக் கொண்டது. பயங்கரமான தன்மை வாய்ந்த வெடிமருந்துகளில் நெருப்புப் பட்டால் கேட்க வேண்டுமா? இரவுக்கு இரவே முகாம் நிர்மூலமாகிவிட உயிர் தப்பியவர்கள் ஓட்டம் பிடித்துவிட்டார்கள்!

எவ்வளவோ திட்டங்களிட்டுச் செய்ய முயன்றும் தளபதிகளால் இயலாத ஒரு காரியத்தை முட்டாள் முனிசாமி அநாயாசமாகச் செய்து காட்டிவிட்டான்! தளபதி உட்பட எல்லோரும் அவனைத் தலைமேல் வைத்துக் கூத்தாடினார்கள். அவனது பெரும் சாதனைக்குப் பாராட்டாக ஓர் தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது.

காலம் கைகூடி வந்தால் குப்பையும் கோபுரமாக உயரும் என்ற உண்மை மேற்கண்ட வரலாற்றால் துலங்குகிறதல்லவா?

# ஆகஸ்ட் சொல்லும் கதை




வி. ஆர். ஆர்.

அன்று அதி காலையில் எழுந்தவுடன் ஜூலை மாதம் முடிவடைந்து ஆகஸ்டு ஆரம்பமாகியதை அறிந்த கோபு, ஜூலை மாதக் காலண்டர் ஷீட்டைக் கிழித்தான். ஆகஸ்டு மாதம் அவன் கண் எதிரிலே தோன்றியது. ''என்னைத் தெரியவில்லையா? நான்தான் ஆகஸ்டு; ஜூலையின் தம்பி. செப்டம்பரின் அண்ணன்'' என்றது. ''என்னுடைய கதையைக் கொஞ்சம் சொல்லுகிறேன், கேள்'' என்று கூறி, தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தது ஆகஸ்டு.

ஆகஸ்டு என்றால் ஆங்கிலத்திலே 'புனிதமான, கௌரவமான' என்று அர்த்தம். அதே போல இந்தியாவில் நான் ரொம்ப கௌரவமான மாதமாவேன். ''மாதங்களில் மார்கழி மாதம் நான்'' என்று கிருஷ்ணபிரான் கீதையில் சொல்லியிருப்பதாகப் பாகவதர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். ஆனால் இந்திய சுதந்தரப் போராட்டத்திலே மிக முக்கியம் வாய்ந்த மாதம் நான்தான்.

பாரத நாட்டின் பழம் பெருமையை எடுத்துக் கூறி, அந்நிய நாட்டினரிடம் அடிமைப்பட்டிருந்த வாழ்வினை அடியோடு அகற்ற அரும்பாடுபட்ட அருமைத் தலைவர்களை நாம் மறக்க முடியுமா? அவர்கள் அமரர்களான அந்தப் புனித நாட்களைத்தான் நாம் மறக்கலாமா? நன்றி மறப்பதை விடக் கொடுமை வேறு என்ன இருக்க முடியும்?

தம்பீ-என் வயது உனக்குத் தெரியுமல்லவா? இன்று எனக்கு 1956...! 1920-ஆம் வயதில், என் முதல் நாள் அன்று ஒரு மாபெரும் சம்பவம் நடந்தது. அதை நீ என்றுமே மறக்கக் கூடாது. 'சுயராஜ்யம் நமது பிறப்புரிமை' என்ற சுதந்தர மந்திரத்தை இந்திய மக்களுக்கு எடுத்தோதிய மகாராஷ்டிரச் சிங்கத்தைப்பற்றி உனக்குத் தெரியுமா? - ஆம் அவர்தான் லோகமான்ய பாலகங்காதர திலகர். அவரது நூற்றாண்டு விழாவைக்கூட இந்த ஜூலை மாதம் நாடெங்கும் கொண்டாடியதை நீ பத்திரிகைகளில் படித்திருக்கலாமே! அந்நிய ஆட்சி போகவேண்டும் என்று அவர் எழுதியதற்காக அரசரங்கத்தார் அவருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை அளித்தனர். சிறைக்குச் செல்லத் துணிந்தால்தான் நாடு சுதந்தரமடைய முடியும் என்பதைத் தம் செயல் மூலம் சொல்லித் தந்த வீரர் அவர். அச்சத்தைப் போக்கி, ஆண்மையை ஊட்டி, தியாக வேள்வியில் மூழ்கச் செய்தார் அவர். அந்நிய அரசியலில் அன்று நிலவிய மிதவாதப் போக்கை நீக்கி, காங்கிரஸைத் தீவிரப்படுத்தினார். நாட்டின் பணியை முடித்த அவர் என் முதல் தேதியில் அமரரானார்.

''1941-ஆம் ஆண்டிலே ஆறாம் தேதி மற்றொரு நிகழ்ச்சி. அதுவும் உத்தமர் ஒருவர் உயிர் நீத்த சம்பவம்தான்! நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பூர்ணமாகச் சேவை செய்து பரிபக்குவமடைந்த மகான் அவர். இனிய சுதந்தர நாதத்தை எழுப்பிய அவர் பாரத மாதாவின் பாதங்களில் தமது கவித் திறமையினால் கீதாஞ்சலி செய்து, நாட்டின் பெருமையை உலகறியச் செய்தார். அவர் யார் என்று



டாகுர்

தெரியவில்லையா? அவர்தான் வங்கத் தங்கம், மகாகவி ரவீந்திரநாத டாகுர். அவர் கவிகளையும் அவர் எழுதிய நாவல்களையும், கதைகளையும் சிறு நாடகங்களையும், கவிதைகளையும் படித்திராவிட்டால் இனிப் படிக்கவேண்டும். அந்நிய ஆட்சியாளர்கள் கூட அவரது கவித்திறமையைப் போற்றி 'சர்' பட்டம் அளித்தனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் இந்திய மக்களைக் கொடுமையாக நடத்தியதைக் கண்டு அவரது உள்ளம் கொதித்தது. வெள்ளையர் தந்த பட்டத்தை அவமானச் சின்னம் என்று கூறி உதறி எறிந்து, ஆங்கிலேய ஆட்சியின் அக்கிரமங்களை அகில உலகுமறிய அம்பலப்படுத்தினார். நாட்டின் மானத்தைக் காக்க - மதிப்பை உயர்த்த - பண்பாட்டைப் பல்வேறு நாட்டினரும் உணரச் செய்த பெருமையில் பெரும் பங்கு மகாகவி டாகுருக்கு உண்டு.

தம்பி, 1942 - இதை நினைக்கும்போதே எனது உள்ளத்திலிருக்கும் சோர்வெல்லாம் பறந்துவிடுகிறது. புதிய வேகம் தோன்றுகிறது. மாசற்ற தேசபக்தியின் - மகத்தான தியாகத்தின் - சின்னமாய் விளங்கினேன் இவ்வாண்டு. உலகெங்கும் போர்! வல்லரசுகளுக்கிடையே மோதல்! லண்டன் நகரை விமானங்களிலிருந்து குண்டுகள்பொழிந்து நாசமாக்குகின்றன, ஹிட்லரின் படைகள். சோவியத் ரஷ்யாவிற்குள் ஊடுருவி முன்னேறுகின்றன ஹிட்லரின் துருப்புகள். ஜப்பான் படைகள் இந்திய நாட்டின் எல்லை அருகே நின்றுகொண்டிருந்தன.

''நாட்டைக் காக்க பிரிட்டிஷ் சர்க்காரால் முடியாது, தேசிய சர்க்கார் வேண்டும்'' என்று தேசத் தலைவர்கள் நினைத்தார்கள். கேட்டார்கள். ஆனால் ஆட்சியாளர்கள் மறுத்துவிட்டார்கள்.

ஏழாம் தேதி-பம்பாய் நகரில் தேசத் தலைவர்கள் கூடினார்கள். எட்டாம் தேதி காந்திஜி வீர முழக்கம் செய்தார். ''போதும் உன் ஆட்சி-போ வெளியே!'' என்றார் அவர்.

பொங்கியது கோபம் ஆட்சியாளர்களுக்கு. ஒன்பதாம் தேதி தேசத் தலைவர்களைக் காணோம். ''அவர்கள் எங்கே?'' என்று கேட்டனர் மக்கள்.

அவர்களைக் கைது செய்து யாருக்கும் தெரியாமல் கடத்திச் சென்றுவிட்டனர். சும்மாயிருப்பார்களா, தேச மக்கள்! வீறிட்டு எழுந்தனர். தொழிற்சாலைகளுக்குச் செல்லவில்லை தொழிலாளர்கள். கடைகளை மூடிவிட்டனர் வியாபாரிகள்; பள்ளிகளைவிட்டு வெளியேறிய உன்னைப்போன்ற மாணவர்கள் போராட்டத் தீயில் குதித்தனர்.

ராணுவம் சுட்டது; போலீஸ் அடித்தது. சிறையிலே தள்ளியது.



காந்தி

மக்கள் அந்நிய ஆட்சியின் காரியாலயங்களைக் கொளுத்தினர். மக்களின் வேகம் கொஞ்சமும் தணியவில்லை. எத்தனை மாணவர்கள் சிறைப்படுத்தப்பட்டனரோ!.. கணக்கில்லை. சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் எத்தனையோ! அந்த நாட்களை நினைக்க நினைக்க வீரம் பொங்குகிறது. மாணவர்களின் பங்கு மகத்தானது..!

தம்பீ, கைது செய்த மகாத்மாவைக் கடத்திக்கொண்டு போனார்கள் என்று சொன்னேன் அல்லவா? அவரை எங்கே கொண்டு சிறையில் வைத்தார்கள், தெரியுமா? புனா நகரில் 'ஆகாகான் மாளிகை' என்ற சிறையிலே அடைத்தார்கள்.

அங்கே மற்றொரு சம்பவம் 16-ஆம் தேதி நடைபெற்றது. இன்று நினைத்தாலும் நெஞ்சம் பொங்குகிறது. உள்ளம் உருகிக் கண்ணீர் பெருகுகிறது. காந்திஜியின் நிழல்போல - அந்தரங்கக் காரியதரிசியாக அரும் பணியாற்றியவர் மகாதேவ தேசாய் என்பவர்; அவர் மகா மேதை. காந்திஜிக்காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்தவர். அவர் திடீரென்று மரணமடைந்துவிட்டார். அன்று காந்திஜி அடைந்த வேதனையை என்னால் சொல்ல முடியாது.



தேசியக் கொடி



திலகர்

அந்தோ! இம்மாதிரியான பல மாணிக்கங்களை இந்தப் புனிதமான சுதந்தர வேள்வியில் அர்ப்பணித்துள்ளது நம் நாடு.

அந்தத் தியாகத்தின் பலனாக 1947-ஆம் ஆண்டு 15-ஆம் நாளில் பிரிட்டிஷ் ஆட்சி மறைந்தது. இந்தியரின் ஆட்சி உதயமாயிற்று. அசோக சக்கரம் பொறிக்கப்பட்ட மூவர்ண தேசியக் கொடியை வெள்ளை ஆட்சியாளர்களே வணக்கம் செலுத்தி மரியாதை செய்ய, நாட்டின் தலைவர்கள் நாடெங்கும் கம்பீரமாகப் பறக்கவிட்டனர்.

அந்தத் தியாகிகளை நீ மறக்காதே. நீயும் உன் நண்பர்களும் காலண்டரில் என்னைப் பார்க்கும் போது இவைகளை எல்லாம் பற்றி நினைத்துப் பாருங்கள். இன்று நமக்குச் சுதந்தர நாள். இன்று இந்தியர் அனுபவிக்கும் சுதந்தர வாழ்விற்கு வித்திட்ட தியாக சீலர்களுக்கு மனப் பூர்வமான அஞ்சலி செய்வோம். அவர்கள் பெற்றளித்த சுதந்தரத்தைப் பேணி வளர்க்க உறுதிகொள்வோம்.

# மதம்



வி. ஆர். பாலன்

★

வெகு நேரமாகத் தன் அண்ணனைத் தேடிய மாலதி சலித்துக்கொண்டே கோவில் தோட்டத்துக்குள் நுழைந்தாள். பிரம்மாண்டமாக வளர்ந்திருந்த ஆலமரத்தின்கீழ் அதன் வேரில் உட்கார்ந்திருந்த ராமனைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்துக்கொண்டே அவன் அருகில் ஓடினாள். ஆலமரத்தின் பெரிய விழுது ஒன்றில் கோவில் யானை சங்கிலியால் கட்டப்பட் டிருந்தது.

''என்ன அண்ணா, ஒரு மாதிரியாக இருக்கிறாய்?'' என்று அவன் அருகில் வந்து உட்கார்ந்தாள் மாலதி.

''வேறொன்றுமில்லை மாலதி! நம் 'ராஜா'வைப் பார். ரொம்ப இளைத்துவிட்டது. இல்லையா?''

மாலதி திடுக்கிட்டு எழுந்தாள். ராஜாவை—அவர்களுடைய அருமை யானையை - ஒரு முறை சுற்றி வந்தாள். ''ஆமாம், ராமா! இளைத்துத்தான் விட்டது!'' என்றாள், மிகவும் வருத்தத்தோடு.

''நம் ராஜா இப்படி இளைத்து வருவதன் காரணம் எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் எப்படி அதைத் தடுப்பது என்றுதான் புரியவில்லை'' என்றான் ராமன்.

அதற்குள், ''மாலதி, ராமா!'' என்று அழைத்துக் கொண்டே வந்தார் கங்காதரன்.

கங்காதரன்தான் அவர்கள் தகப்பனார். அவர் அந்த ஊர்க் கோவில் யானையின் பாதுகாப்பாளர். கோவில் தர்மகர்த்தா அந்த யானைக்காகும் செலவை அன்றாடம் கோவில் பணத்திலேயிருந்து கொடுத்துவருவார். அதோடு அவர் வேலை தீர்ந்தது. மற்றபடி ராஜாவைக் குளத்திற்கு அழைத்துப்போய் குளிப்பாட்டிவிட்டு அதற்குத் தீனி வைப்பது எல்லாம் கங்காதரன்தான். மாலதியும் ராமனும் சின்னஞ் சிறு வயது முதல் ராஜாவின்மீது புரண்டு விளையாடி வளர்ந்தவர்கள்.

தந்தையின் குரல் கேட்டதும் மாலதியும் ராமனும் எழுந்து அவருக்கு முன்னால் வந்தனர். ''இங்கே என்ன செய்கிறீர்கள்? உள்ளே போய்ப் படியுங்கள்!'' என்று கூறியதும் இருவரும் மெல்ல நழுவி விட்டார்கள். சற்றுத் தூரம் சென்றதும் மாலதியை அனுப்பி விட்டு ராமன் மட்டும் ஒரு மரத்துக்குப் பின்னால் மறைந்து நின்றுகொண்டு, தந்தை செய்வதைக் கவனித்தான். கங்காதரன் தாம் கொண்டுவந்திருந்த பாத்திரத்திலிருந்து சோற்றை எடுத்துப்



# பிடித்தது

பெரிய பெரிய உருண்டைகளாக உருட்டி இரண்டு கவளங்கள் யானையின் வாயில் போட்டார். பிறகு தென்னம் ஓலைகளைக் கொஞ்சம் எடுத்து அதன் அருகில் போட்டார்.

அவர் திரும்பும்போது அந்த யானை செய்த அட்டகாசம் - அடேயப்பா! என்ன பிளிறல் பிளிறிவிட்டது. கால்கள் இரண்டையும் தூக்கித் தூக்கித் தரையில் அடித்துக் குதித்தது. துதிக்கையை மண்மீது போட்டு இப்படியும் அப்படியும் புரட்டியது.

அன்று மாலை மலைக்கோவிலுக்குச் செல்லும் பாதையில் அமர்ந்து வம்பளக்கத் தொடங்கினார்கள் ராமனும் மாலதியும். சாலையில் அதிக ஜன நடமாட்டம் இல்லை.

திடீரென்று, ''ஐயோ, ஐயோ!'' என்று அலறிக்கொண்டு அந்தச் சாலையில் ஓடிவந்தார் கங்காதரன். அவர் மாலதியையும் ராமனையும் கவனிக்கவேயில்லை. சாலையில் போய்க் கொண்டிருந்தவர்களிடம் ''ஓடுங்கள், ஓடுங்கள், கோவில் யானைக்கு மதம் பிடித்துவிட்டது!'' என்று கூறிவிட்டு, தலைதெறிக்க ஓடினார். அதைக் கேட்டதும் சாலையில் சென்றவர்களும் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடினார்கள்.

மாலதியின் முகத்தில் பயம் படர்ந்தது. ''ராமா, வா; நாமும் ஓடலாம்!'' என்று எழுந்தாள்.

ராமன் சிரித்தான். ''ராஜாவுக்கு மதம் பிடித்துவிட்டது

என்று அப்பா கூறுவதை நீ நம்புகிருயா மாலதி? நான் ஒருகாலும் இதை நம்பமாட்டேன்'' என்ருன்.

துதிக்கையைத் தூக்கிக்கொண்டு பாய்ந்தோடி வந்தது ராஜா.

''ராஜா''—கூவினுன் ராமன்.

யானை நின்றது. பிறகு ஆசையோடு தலையைக் குலுக்கியது.

ராமன் ஓடிவந்து அதை அணைத்துக்கொண்டான். ''சுத்த முட்டாளடா நீ. இப்படியா பழி வாங்குவது? நான் சொல்லித் தருகிறேன், வா!'' என்று கூறிவிட்டு, ''உட்கார்'' என்ருன்.

ராஜா மண்டியிட்டு அமர்ந்தது. ராமன் தாவி அதன்மீது ஏறி அமர்ந்தான். வியப்புடன் இதையெல்லாம் கவனித்துக்கொண்டு நின்ற மாலதியிடம், ''நீ வீட்டுக்குப் போ!'' என்று கூறினுன். பிறகு யானையின் காதில் ஏதோ குனிந்து கூறினுன். யானை மெல்ல நடந்தது.

மறுநாள்காலை. கோவில் தர்மகர்த்தாவிடம் ஓடினுர் கங்காதரன். அவர்கூடவே கூட்டமாக ஜனங்கள் சென்றனர். இவர்களைக் கண்ட தர்மகர்த்தா கோவிலைவிட்டு வெளியே வந்தார். ''ஏது, என்ன'' என்று தர்மகர்த்தா கேட்குமுன்பே கங்காதரன் அலறினுர். ''ஐயா, ராஜாவுக்கு மதம் பிடித்துவிட்டது. நேற்று எங்களை யெல்லாம் துரத்திக்கொண்டு வந்ததோடு நில்லாமல் என்னுடைய கரும்புத் தோட்டத்தையும் தென்னந்தோப்பையும் நாசம் செய்துவிட்டது!''

அதே சமயம் அங்கே வந்த ராமன், ''என்னப்பா விஷயம்?''—என்று கேட்டான்.

''என்ன.. என்ன.. மதமா? ராஜாவுக்கா?.. என்று கூறிவிட்டுக் கலகலவென்று சிரித்தான் ராமன்.

''என்னடா சிரிக்கிருய்?'' என்று உறுமினுர் கங்காதரன்.

''அதோ பாருங்கள்''—என்று மலைப்பாதையைச் சுட்டிக் காட்டினுன் ராமன். எல்லாரும் அந்தத் திசையை நோக்கினுர்கள். மலைப்பாதையில் இரண்டு பர்லாங் தூரத்தில் 'ராஜா' இரண்டு செவிகளையும் விசிறிக்கொண்டு நின்றிருந்தது.

ராமன் தர்மகர்த்தாவைப் பார்த்துக் கூறினுன். ''ஐயா! யானைக்குப் பிடிக்கவில்லை. எங்கள் அப்பாவுக்குத்தான் பிடித்திருக்கிறது..''

கங்காதரன் துள்ளிக் குதித்தார். ராமன் சிறிதும் தளரவில்லை.

''என் தகப்பனுர் என்பதற்காக உண்மையை மறைக்க மாட்டேன். எல்லாருமே கேளுங்கள்! சில நாட்களாகவே யானை இளைத்து வருவதைக் கவனித்தேன். முன்பெல்லாம் ஒரு பெரிய அண்டா நிறையச் சாதம் கொண்டுவந்து உருட்டி உருட்டி 'ராஜா'வுக்குக் கொடுப்பார். சில நாட்களாக அதற்குக் கால்வயிற்றுச் சோறுதான் போடுகிருர்.

''நான் அப்பாவிடம் அதைப் பற்றி ஒரு நாள் கேட்டபோது, 'ராஜாவுக்கு உடம்பு சரியில்லை. அதனுல்தான்' என்று சொல்லிவிட்டார். ஆனுல் தர்மகர்த்தாவிடமிருந்து அன்றைத் தீனிக்கு என்று நாற்பது ரூபாய் என் தந்தை பெற்றுக்கொண்டதைக் கவனித்தேன். பிறகு இருபது ரூபாயை என் அம்மாவிடம் கொடுத்து உள்ளே வைக்கச் சொன்னதையும் கவனித்தேன். அப்போதுதான் எனக்குப் புரிந்தது.

அப்பாவின் செய்கை எனக்கு வருத்தத்தை அளித்தது. ராஜாவின் வயிறு பழையபடி நிறைய என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண் டிருந்தேன். அதற்குள் யானைக்கே பொறுக்கவில்லை. அப்பாவைப் பழி தீர்த்துக்கொள்ள, சங்கிலியை அறுத்துக்கொண்டு வந்து அவரைத் துரத்தி இருக்கிறது. அப்பாவுக்குப் பாடம் கற்பிக்க எண்ணி நான் அதை நிறுத்தி, அப்பாவின் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றேன். அதன் பசி தணிந்தது. அப்பா யானையின் வயிற்றில் அடித்தார். யானை அவர் வாயில் அடித்துவிட்டது. இதில் தவறு என்ன இருக்கிறது?''—ராமன் கூறி முடித்தான்.

ராமனின் நேர்மையான குணம் தர்மகர்த்தாவுக்கே மகிழ்ச்சியை அளித்தது. ஓடிவந்து அணைத்துக் கொண்டார்.




## வெண்ணிலா

வட்ட மான வெண்ணிலா
வானத்திலே தோன்றியே
எட்டுத் திக்கும் நிலவினை
எங்கும் வீசி வருகுதே.
தோசைக் கல்லைப் போலவே
தோன்றும் அதனைக் கண்டதும்
ஆசை உள்ளம் தன்னிலே
அதிகம் பெருக லாகுதே.
பட்டு, அம்மா, தந்தையும்
பாட்டி யோடு வந்தனர்;
தட்டில் கொண்டு வந்ததை
தரையின் மீது வைத்தனர்.
அருமை யான நிலவிலே
அமர்ந்து உணவுஉண்டனர்;
பெருமை யாக நிலவிலே
பேசிப் பேசி மகிழ்ந்தனர்.

—ச. சியாமளா.

# நட்பு வளர்க!

**எஸ். விசுவநாதன்**

1

"ஹாய்..! யார்ரா அது.. 'கிரவுண்ட்' லே! நாங்க விளையாடற இடத்திலே வந்து விளையாடறது? உம்..எடுங்கடா 'விக்கெட்'டை, ஓடுங்கடா பசங்களா! உம்..எடு..எடு!''—பாபு கூவிக்கொண்டே, அந்தச் சிறுவர்களின் கிரிக்கெட் ஆட்டத்தின், இடையே புகுந்து அவர்களின் 'விக்கெட்டு'களைத் தரையினின்று பெயர்த்து வீசினான்.

அந்தச் சிறுவர்களில் பலரும் பயந்து நடுங்கியேவிட்டனர்.

''கொண்டாங்கடா நம்ப 'ஸ்டம்ப்'பை! நடுங்க, இந்த இடத்திலே! ஒண்ணரை வருஷமா இந்த இடத்திலே கிரிக்கெட் ஆடறோம் நாம்ப! இவங்க—நேத்து மொளச்ச பசங்க—திடீர்னு வந்து 'ஸ்டம்ப்' நட்டு ஆட ஆரம்பிச்சுட்டாங்க! ஹெஹ்ஹ ஹெஹ்ஹ ஹே..!'' என்று கூவி எக்காளச் சிரிப்புச் சிரித்தான் பாபு, எங்களை நோக்கி

எங்கள் 'ஸ்டூடன்ட்ஸ் கிரிக்கெட் கிளப்'பின் தலைவன் பாபுதான். அசாதாரண துணிச்சலும் விளையாட்டு ஆர்வமும் நிரம்பிய மாணவன். அந்த 'ரெயில்வே கிரவுண்டி'ல் நாங்கள் ஒன்றரை வருஷமாகக் கிரிக்கெட் ஆடுகிறோம். இடையே யாரும் தலையிட்டதில்லை. ஆனால் இன்று வேறு சில சிறுவர்கள்—சுமார் பத்துப் பேர்—நாங்கள் விளையாடும் இடத்திலேயே 'ஸ்டம்பு'களை நட்டு, கிரிக்கெட் ஆடிக்கொண்டிருந்ததைக் கண்டுதான் பாபு ஆரம்பத்தில் உள்ளபடி கூவியவாறே அவர்களின் 'ஸ்டம்பு'களைப் பிடுங்கி வீசினான்.

''இவர் பெரிய இவரு! நாங்க விளையாடினா உங்களுக்கு என்னய்யா? நீங்க மாத்திரம்தான் விளையாடணும்னு எழுதி வச்சிருக்குதோ?'' என்று முன்னால் வந்தான் ஒரு குண்டுப் பையன்.

''அதோ பாருடா, பீப்பாய் கூடப் பேசுது!''—பாபு இப்படிக் கேலியாக அவனைப் பார்த்துக் கூறியதும் 'கொல்'லென்ற சிரிப்பு எங்களிடையே எழுந்தது.

அந்தச் சிறுவர்களில் சிலர் எங்களைப் பார்த்துப் பல்லை 'நற நற'வென்று கடித்தனர்.

''சும்மாப் போங்கடா பசங்களா! வேறே மைதானம் பார்த்து ஆடுங்க! பொழைச்சுப் போங்க.. உம்..!''

''வேறே 'கிரவுண்ட்' பார்த்து ஆடறதுக்கு நீங்க ஒண்ணும் சொல்லித் தரவேண்டியதில்லீங்க!''

''டேய்! போங்கடா போங்கடான்னு சொல்றேன், என்னமோ முணு முணுத்திட்டிருக்கீங்களே! போங்கடான்னா!''—பாபு இப்படிக் கூறியபடியே அவர்களைத் துரத்துவதுபோல் கிரிக்கெட் மட்டையை ஓங்கிக்கொண்டு பாய்ந்தான்.

காக்கைக் கூட்டத்தில் கல்லை விட்டெறிந்தாற்போல, 'ஹோய்!' என்று கூவியவாறே அவர்கள் ஒட்டம் எடுத்தனர்.

பாபு திரும்பி எங்களிடம் வந்தான்.

''உம்....ஆரம்பிங்கடா ஆட்டத்தை! என்னமோ முளிச்சுக்கிட்டு நிக்கிறீங்களே!'' என்றான்.

''பாபு, பாபு! அதோ பாருடா, அவங்க அங்கேயே நின்னுட்டாங்க!'' என்றான் சீனு.

''ஓடுங்கடா பேடிப் பசங்களாடுய்...!'' - வாயின் இருபுறத்திலும் இரு கைகளையும் கூம்பாக வைத்தபடி கூவினான் வெங்கு.

''தைரியமிருந்தா அடுத்த வாரம் இதே கிரவுண்டிலே - 'மாட்சு'க்கு வரணும்டா டோய்! அடுத்த ஞாயித்துக்கிழமை!'' அந்தச் சிறுவர்களில் இருந்த குண்டுப் பையன் எதிர்ப்புறமிருந்து எங்களை நோக்கிக் கூவினான்.



பாபு என்ன சளைத்தவனா!

''இப்பவே வாங்கடா பேடிப் பசங்களா! அடுத்த ஞாயித்துக் கிழமை என்ன, அடுத்த ஞாயித்துக் கிழமை?... 'சாலஞ்ச்' வேணுமா?''

'' 'சாலஞ்ச்'. நாளைக்கி இதே இடத்துலே எங்க ஆள் கொண்டு வந்து தருவான்!''

அவர்கள் ஓடிவிட்டனர். பாபு திரும்பி எங்களை நோக்கினான். இடது கண்ணை லேசாகச் சுருக்கி - 'திலீப்குமார் ஸ்டைட்'வில்— பேசினான்: 'டேய்! நாம்ப அந்தப் பசங்களை எப்படியாவது ஜயிச்சிடணும்! ஒவ்வொருத்தனும் உசிரைக் கொடுத்து ஆடணும்! கொறஞ்சது ஒரு 'செஞ்சுரி' யாவது போடணும், நம்ப டீம்! ஆமாம்!''

''நிச்சயமாடா! நாம்ப 'செஞ்சுரி' போட்டே தீரணும்!'' எல்லோரும் ஒரே குரலில் உறுதியாகக் கூறினோம்.

போருக்குப் புறப்படுமுன் செய்து கொள்ளும் சத்தியம் போல இருந்தது அது.

''உம்...ஆட்டத்தை ஆரம்பிக்கலாமப்பா!'' என்று பாபு கூறியதும் விளையாட்டைத் துவக்கினோம், பந்தும் கையுமாக.

211803

## 2

'பூவா, தலையா?' போட்டுப் பார்த்ததில் அவர்களுக்கு 'பாட்டிங்'ஸூம் (மட்டை பிடித்தல்) எங்களுக்கு 'பீல்டிங்'ஸூம் கிடைத்தன.

பாபுவின் முன்னேற்பாட்டின்படி எல்லோரும் அவரவர்க்கென்று குறிப்பிடப்பட்ட இடங்களில் நின்று கொண்டோம். நான் கைகளுக்கு உறை ('க்ளௌஸ்') அணிந்து காலுக்கும் கட்டிக் கொண்டு 'விக்கெட் கீப்ப'ராக நின்றேன்.

அவர்கள் கோஷ்டியில் இருவர் ஆளுக்கொரு மட்டை எடுத்துக் கொண்டு 'விக்கெட்'டை நோக்கி வீர நடை போட்டனர், அவர்கள் படைகளின் 'க்ளப், க்ளப்' என்ற கைதட்டல் தாளத்திற்கு ஏற்றபடி,

ஆட்டம் மும்முரமாக நடந்தது. ஐம்பது, அறுபது பேர் விளையாட்டை ரசிக்கக் கூடியிருந்தனர். அவர்களின் ஆட்ட மும்முரத்தையும், திறனையும் பார்த்துப் பாபுவுக்கே வியப்பாகப் போய்விட்டது. நேரம் ஓடிக்கொண்டிருந்தது. பகலின் கோர வெயில் எங்களையும் எட்டிப் பார்த்தது... 'ஸ்கோர்' ஏறிக்கொண்டிருந்தது. 'அவுட்'டும் ஆகி வந்தனர். கடைசியாக எல்லோரும் 'அவுட்'டான பிறகு 'ஸ்கோர்' 54 ஆக இருந்தது.

''ஹாய்...ஹோய்!' என்று எங்கள் கட்சியினர் வெற்றி எக்காளத்துடன் கூவியதை பாபு அடக்கினான். இப்பொழுது நாங்கள் மட்டை பிடிக்கவேண்டும். எங்கள் ஆட்டமும் துவங்கியது.... ஆரம்பத்தில் வந்த சுவடு தெரியாமல் அவர்கள் நான்கு பேரைச் 'சடசட' வென்று வீழ்த்தியதும் அவர்களின் ஆரவாரத்தைப் பார்க்கவேண்டுமே!

பாபுவுக்கு நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக்கொண்டது. ''நல்லா ஆடித் தொலையுங்கடா, மானத்தை வாங்கிடாதீங்க!'' என்று எச்சரித்தபடியே இருந்தான். 'ஸ்கோர்' 14-இல் இருக்கும் பொழுது எங்கள் கோஷ்டியில் ஐந்தாமவன் 'அவுட்'டாகிவிடவே, பாபு மட்டையுடன் நுழைந்தான்.

'டீம் காப்டன்' அல்லவா? கைதட்டல் காதைத் துளைத்தது. பாபு 'விக்கெட்'டிற்கு முன்னால் 'ஸ்டெடி'யாக மட்டையுடன் நின்றான்.

அதை ஆவேசம் என்றுதான் சொல்ல வேண்டும்! கண்ணை மூடிக்கொண்டு அடித்து வெளுத்தான். ''பவுண்டரி...பவுண்டரி'' என்ற மகிழ்ச்சிக் கூவலுக்கிடையே பலத்த கைதட்டல் ஓசை மிதந்தது. பாபு 'சட சட'வென்று பவுண்டரிகளும் ஒற்றை, இரட்டையுமாக முப்பத்தொன்பது 'ரன்'கள் எடுத்தான், சுமார் நாற்பது நிமிடத்திற்குள். ஆக எங்கள் ஸ்கோர் 53-இல் நின்றது. நேரம் ஓடியது. கைத்திறமை 'ஸ்கோரை' அதிகமாக்கியது.

அறுபத்தைந்து ரன்கள்!

'போலிங்' செய்பவன் ஆத்திரத்துடன் பந்தை 'போல்' செய்தான்; பாபு மட்டையை ஓங்கிவிட்டான். பின்பு ஒரு நொடிக்குள் அவன் கேட்டது ஆரவாரக் கூச்சல் அல்ல! ''ஹா.. ஐயோ...தலை போச்சே...!'' என்ற பயங்கர அலறல்! பாபு மட்டையைப் போட்டு விட்டு, அவனை நோக்கி



ஓடினான். எல்லோரும் அடிபட்டவனைச் சூழ்ந்துகொண்டோம். அந்த குண்டுப் பையன்தான் அந்தப் பரிதாப நிலைக்கு ஆளானவன்.. 'லெதர்' பந்து அவன் தலையைப் பக்க வாட்டில்—நெற்றிப் பொட்டருகே - பதம் பார்த்திருந்தது!

''ஐயையோ, ரத்தம்டா. ரத்தம்! துணியைக் கிழிச்சுக் கட்டுங்க!''

நான் ஜேபியில் கையை விட்டு, கர்சீப்பை எடுத்து அவன் தலைக்குக் கட்டினேன். பாபு அவன் தலையைத் தன் கைகளில் தாங்கிக் கொண்டான். வெங்கு ஓடிப் போய் எங்கிருந்தோ ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வந்தான். தற்

காலிகமான முதல் உதவிச் சிகிச்சைகள் செய்து முடித்ததும். அவனைச் சற்று ஆசுவாசப்படுத்திக் காற்றுட வைத்திருந்தோம்.

அவனும் மெதுவாகக் கண்ணை விழிக்கவே, மெல்ல அவனைத் தாங்கியபடியே அவனது வீட்டை நோக்கி நடந்தோம். எங்கள் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவன், ''எப்படியோ நாம்ப ஜயிச்சாச்சு!'' என்று கூறியதைக் கேட்டதும் பாபு அவனை ஒரு விழி விழித்துப் பார்த்தானே, அப்பா! ''சும்மா வாயை மூடிக்கொண்டு வா!'' என்பதுபோல அல்லவோ இருந்தது அது!

## 3

அந்தப் பையனை - சங்கரனை - அவர்கள் வீட்டில் விட்டுவிட்டு வீடு வந்து சேரும்போது இரவு மணி ஏழு. அவன் அப்பாவும் அம்மாவும் எப்படித் துடிதுடித்து விட்டார்கள்!

அன்றைய 'மாட்ச்' அப்படி ஆகி விட்டது;

பாபுவுக்குத் தூக்கமே பிடிக்கவில்லையாம் அன்று இரவு. 'வீணாக ஒரு விளையாட்டு இடத் தகராறில் விளைந்ததல்லவா இந்த வினை!' என்று புழுங்கிப் புழுங்கி மனம்



வெதும்பினுனும். ''ஏண்டா பாலு! அவங்களேயும் அந்த மைதான ஓரத்திலேயே விளேயாடச் சொல்லி நாமும் ஒதுங்கி யிருந்தா இந்த மாதிரி நடந்திருக்குமா? அண்ணக்கி ஏதோ திமிரிலே அப்படிச் சொல்லிட்டேன்!'' என்று உண்மையான வருத்தத்துடன் என்னிடம் கூறினுன் பாபு.

தினக் காலண்டரில் இரண்டு தாள்கள் கிழிக்கப்பட்டன.

அந்தப் பையன் சங்கரனுக்குச் சிறிதளவு குணம் ஏற்பட்டிருந்தது. தலைக்கட்டு அப்படியே இருந்தது. படுத்தபடியேதான் இருந்தான்.

அந்தச் சம்பவம் நடந்த பிறகு, பாபுவுக்கும் சங்கரனுக்கும் பலத்த சிநேகம் உண்டாகி விட்டது. இளம் உள்ளங்கள்தானே! அவை ஒன்றிவிடவோ, கன்றிவிடவோ ஒரு சிறு நிகழ்ச்சி போதுமல்லவா?

பாபு திடீரென்று வந்து என்னைக் கூப்பிட்டான். ''வர்றியா... சங்கரன் வீட்டுக்குப் போய்ப் பார்த்திட்டு வந்துடலாம்?'' என்று.

இருவருமாகப் புறப்பட்டுச் சென்றோம். சங்கரன் படுக்கையில் சாய்வாகத் தலையணையோடு ஒட்டி உட்கார்ந்திருந்தான்.

பாபுதான் பேசினுன்:

''சங்கர்! உன் காயம் எப்படியிருக்கு? அன்னிக்குக் கண் மண் தெரியாமெ ஆடித்தான் உனக்கு ஆபத்து நேர்ந்தது. அதை இப்ப நினைச்சாலும் வருத்தமாயிருக்கு. என்னை மன்னிச்சுடு, சங்கர், என்னை மன்னிச்சுடு!'' என்றுன் கனிவுடன்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை, பாபு! விளையாட்டுன்னு இதெல்லாம் சகஜந்தானே! எனக்கு உன் பேரில் வருத்தமே இல்லே. உன் ஆட்டத் திறமையைக் கண்டு பாராட்டணும்னுகூட நினைச்சுட்டிருந்தேன். நீயே வந்துட்டே!''

''பூ! நான் என்ன பெரிய சாம்பியனு? அன்னிக்கிக் கொஞ்சம் சுமாரா ஆடினேன். உன் கட்சிக்காரங்க ஆடியதைப் பார்க்க என் ஆட்டமெல்லாம் ஒண்ணுமேயில்லே! நல்லாப் பயிற்சி கொடுத்திருக்கியே! நம்ப இரண்டு கோஷ்டிகளும் சேர்த்து நல்ல 'டீமை'த் தேர்ந்தெடுத்து 'ஜங்ஷன் டீமு'டன் விளையாடலாம்னு ஒரு யோசனை இருக்கு; என்ன சொல்றே?''

''அது சரிதான். ஆனு என்னை நம்புவதில் பிரயோஜனம் இல்லே. உடம்பு எப்போ குணமாகுமோ? என்னைத் தவிர மத்தவங்களெல்லாம் நீ கூப்பிட்டா வருவாங்க; நானும் அவங்க கிட்டே சொல்றேன். 'ஜங்ஷன் டீமு'டன் விளையாடி வெற்றிச் செய்தியை எனக்குத் தெரிவிக்கணும்!'' என்று கூறி ஒரு சிறு தாளில் 'நட்பு வளர்க!' என்றெழுதி அதன் கீழே தன் புதிய விலாசத்தையும் குறித்துக் கொடுத்தான்.

ஆனுல் அன்று இரவே அவனுடைய அப்பா வேறு ஊருக்கு மாற்றலாகிவிடவே எங்களுக்கெல்லாம் சொல்லக்கூட நேரமின்றி அவன் ஊருக்குப் போய்விட்டதாகச் செய்தி கிடைத்தது.

ஆனுல் எங்களுக்கு என்னவோ சங்கரன் எங்கள் பக்கத்திலேயே தொடர்ந்து தொடர்ந்து வருவதாகத் தோன்றிக்கொண்டிருந்தது. நடமாடும் பீப்பாய் என்று நாங்கள் கேலி செய்த அந்த நல்ல பையனை எங்களால் மறக்கவே முடியவில்லை! வெளியூர் போன பிறகும் இன்றும் எங்கள் நட்பு கடித மூலமாக வளர்ந்துகொண்டு தான் இருக்கிறது.


சைக்கிள்
புரொபஸர் விஞ்ஞானம்
உங்கள் இருவருக்கும் சைக்கிள் விடத் தெரியும். ஆனால், அது எப்படியெல்லாம் வளர்ந்து உரு மாறிற்று, அதில் என்ன என்ன விஞ்ஞானத் தத்துவங்கள் பயன்படுகின்றன இவைகளைப்பற்றி உங்களுக்குத் தெரியாதல்லவா?
ஆமாம், சொல்லுங்கள், கேட்கிறோம்.
மனிதனுக்கும் விரைவாகச் செல்ல வேண்டும் என்ற ஆசை நெடுங் காலமாக இருந்தது. அதன் விளைவுகளில் ஒன்றுதான் சைக்கிள். இப்பொழுது அழகழகான சைக்கிள்களைப் பார்க்கிறீர்கள். அதன் வேலைத் தத்துவம் (Principle) ஒரு பௌதிக விதி (Physical law). சுழலும் பொருள் அதன் சுழற்சித் தளத்தை (Plane of rotation) விட்டு விலகுவதில்லை. பம்பரம் சுற்றும்போது ஆணி முனையில் நிற்பதைப் போலவும் சிறுவர்கள் உருட்டும் வளையம் ஓடும்போது சாய்ந்து விழாமல் இருப்பது போலவும், ஓடும் சைக்கிளும் சாயாமல் —செங்குத்துத் தளத்தைவிட்டு மாறாமல்— இருக்கிறது. இதுதான் அதன் ஜீவ தத்துவம். முதன் முதலாக, 1779 - ஆம வஷத்தில் மனித முயற்சியால், அதாவது ஏறிச் சவாரி செய்யும் ஆளின் தசைத் திறனை (Musculer Power) உபயோகித்து ஓடிய ஒரு வகை வண்டி பிளான்ஷார்டு (Blanchard) மாகுரியே (Magurier) என்னும் இரண்டு பிரெஞ்சுக்காரர்களால் இயற்றப்பட்டது.


3
ஆனல் சைக்கிள் வண்டி இயற்றப்பட்டது பத்தொன்பதாம் நூற்றுண்டில்தான். அது ஜெர்மனியில் ரைன் நதிக்கரையிலுள்ள மான்ஹைம் (Manheim-on-the-Rhine) என்னும் ஊரினரான பாரன் வான் டிரைய்ஸ் (Baron Von Drais) எனபவரால் 1816 - ஆம் வருஷத்தில் அமைக்கப்பட்டது. அதில் சம அளவுள்ள இரண்டு சக்கரங்கள் இருந்தன. உட்கார ஒரு சேணம் (Saddle) இருந்தது முன் சக்கரத்தைத் திருப்புவதற்கு, இரண்டு கைப்பிடி வைத்த கோல் ஒன்று இருந்தது. சவாரி செய்பவன் காலைக் கீழே ஊன்றி, கால் நுனியால் தரையை மாறி மாறி உதைத்து, சைக்கிளை ஓட்டி வரவேண்டியிருந்தது. இதற்கு டிரெய்ஸீன் (Draisine) என்று பெயர். இது பாரிஸில் 1816 - ஆம் வருஷம் செய்யப்பட்டது.
4
பிறகு இங்கிலாந்தில் 1818 - இல் டெனிஸ் ஜான்சன் (Denis Johnson) என்பவர் இதைச் சில திருத்தங்களுடன் அமைத்தார். ஆனல் இயக்க முறை தரையை உதைப்பதுதான். இந்த வாகனத்துக்கு வேலாசிபீட் (Velocipede), ஜோர்க் குதிரை என்று பொருள்படும் டான்டி - ஹார்ஸ் (Dandy horse), இன்னும் பல பல பெயர்கள் உண்டு. 'எலும்புக் குலுக்கி' (Bone Shaker) என்பதும் ஒரு பெயர்.




1879 - இல் அமைத்த சைக்கிள்

# இதுதான் உலகம்!

**வி. வி. ரமணன்**

அச்சரப்பாக்கம் ஸ்டேஷனில் நின்றுகொண்டிருந்த ரெயில் வண்டி 'கூ'வென்று கத்திவிட்டுப் புறப்பட்டது. பிளாட்பாரத்தின் இருண்ட மூலைகளில் காத்திருந்த சிலர் ஓடிவந்து நகரும் ரெயிலில் தொற்றிக் கொண்டனர். அவர்கள் டிக்கட் வாங்காத பிரயாணிகள் என்பது சொல்லாமலே விளங்கும். டிக்கட் பரிசோதகர் இல்லாத பெட்டியாகப் பார்த்து ஏறிக்கொண்டால் ஆபத்தில்லை என்பது அவர்கள் எண்ணம்!

ஆனால் பரிசோதகர் மட்டும் லேசுப்பட்டவரா, என்ன? ரெயில் வேகமாகச் சென்றுகொண்டிருக்கும்போதே ஒரு பெட்டியிலிருந்து இன்னொன்றிற்குத் தாவி எமன் போல் குற்றவாளியின் முன்பு வந்து நிற்கக் கூடியவராயிற்றே!

அந்த ஸ்டேஷனில் டிக்கட்டின்றி ஏறியவர்கள் மூன்று பேர். இருவர் பிச்சைக்காரர்கள். வண்டி சற்று வேகமாகச் செல்லத் தொடங்கியதும் அவர்களில் சங்கீத ஞானம் படைத்தவனான முதல்வன் தன் வாயைத் திறந்து பிரயாணிகளின் காதைத் துளைக்க ஆரம்பித்தான். மற்றவனுக்குப் பாடத் தெரியாது. ஆனால் கேட்போர் மனம் கரையும்படி பிரலாபிக்கத் தெரியும். ''ஐயா, கண்ணில்லாத கபோதி ஐயா..'' என்று அவனும் தன் கைவரிசையைக் காட்ட முனைந்தான்.

மூன்றாமவன் ஒரு சிறுவன்; வயது பதினாறு இருக்கலாம். நிலைமையின் நெருக்கடியால் அவன் இந்தக் குற்றம் செய்வது இதுதான் முதல் தடவை. இயற்கையாகவே அச்சம் அவனை ஆட்டி வைத்துக்கொண்டிருந்தது. பரிசோதகர் கையில் அகப்பட்டால் ஜெயில் வரையில் போக நேரலாமென்று அறிந்திருந்தான் அவன். பெஞ்சியின் ஒரு மூலையில் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தவன் தன் துரதிருஷ்டத்தைக் குறித்துச் சிந்தனை செய்தான்.

அநாதையான அந்தச் சிறுவனின் பெயர் கோபு. தன் சொந்த ஊரில் ஓர் அச்சாபீஸில் உதவியாளனாக வேலை பார்த்து வயிற்றைக் கழுவி வந்தான். அவனது முதலாளி மகா கருமி. அவனுக்கு அரை வயிற்றுச் சாப்பாட்டிற்கே போதாதபடி சம்பளம் கொடுத்தார். ஆனால் உடம்பு ஒடிய வேலை வாங்கிவந்தார். பையனுக்கு மட்டும் ஒரே குறி. அதாவது வேறு எங்காவது சென்று நல்ல உத்தியோகத்தில் அமர்ந்து வாழ்க்கைப் பாதையில் முன்னேற வேண்டும் என்பதுதான்.

கோபுவின் நண்பனொருவன் சென்னையில் இருந்தான். அன்று காலை அந்த நண்பனிடமிருந்து அவசரக் கடிதமொன்று அவனுக்கு வந்தது. 'இங்கே ஒரு வேலை காலியிருக்கிறது. உடனே புறப்பட்டு வந்து சேர். தாமதித்தால் உத்தியோகம் உனக்காகக் காத்திருக்காது' என்று கண்டதும் மனங்குளிர்ந்த கோபு, தன்னிடமிருந்த நான்கு வெள்ளி ரூபாய்களையும் ஜேபியில் போட்டுக்கொண்டு அப்போதே கிளம்பிவிட்டான். தன்னிடம் கருணை காட்டாத எஜமானனிடம் போய் விடை பெற்றுக்கொள்ளக் கூட அவன் விரும்பாததில் வியப்பில்லை.

ஓர் ஆற்றை அடுத்து அமைந்திருந்தது அவன் ஊர். ஆற்றுக்குப் பாலம் கிடையாது. தோணியின் மூலம்தான் கடக்க வேண்டும். பின் ஆறு மைல்தூரம் நடந்தால் அச்சரப்பாக்கம் ரெயில்வே ஸ்டேஷனை அடையலாம். அங்கிருந்து சென்னைக்குக் கட்டணம் மூன்றே முக்கால்ரூபாய்தான்.

கோபு தோணித்துறைக்கு வந்தபோது அங்கே சிறுவர்களின் கும்பல் ஒன்றைக் கண்டான். அவர்கள் நடத்திய கொடுஞ்

செயலைப் பார்த்தபோது அவன் மனம் துடித்தது.

சின்னஞ் சிறு நாய்க்குட்டி. அதைத் தூக்கி ஆற்றில் வீசி எறிவது; அது வெகு சிரமத்துடன் தடுமாறித் தத்தளித்து எப்படியோ நீந்திக் கரையேறும். அவ்வளவு தான். மறு கணம் மீண்டும் பாய்ந்து அதைப் பிடித்துத் தண்ணீரில் வீச வேண்டியது. அந்த எளிய ஜீவன் உயிருக்கு மன்ருடும் காக்ஷி அந்தச் சிறுவர்களுக்கு மகிழ்ச்சி தந்தது. ஒரே சிரிப்பும் கும்மாளமுமாக ஏக ஆரவாரம் செய்து கொண்டிருந்தனர் அவர்கள்.

கோபு சொல்லிய புத்திமதிகள் ஒன்றும் அவர்கள் காதில் ஏற வில்லை. நாய்க்குட்டி சாகும்வரை அவர்கள் விடமாட்டார்கள் என்று திட்டமாய் அவன் கண்டான்.

இதர பிரயாணிகள் வந்ததும் தோணி புறப்பட்டது. அது கரையிலிருந்து நகர்ந்து சிறிது தூரம் செல்லுமுன் சிறுவர்கள் வீசி எறிந்த நாய்க்குட்டி பதினைந்தாவது முறையாக வந்து தோணிக்கருகே தண்ணீரில் விழுந்தது. இது தான் தக்க சமயமெனக் கண்டான் கோபு. சட்டென்று குனிந்து மூழ்கும் அந்தப் பிராணியைத் தூக்கினன். மறுகணம் அது பத்திரமாக அவன் மடியில் சேர்ந்து நன்றி ததும்பும் கண்களால் அவனை நோக்கிற்று.

ஆனல் அந்த ஏழைப் பிராணியின் உயிரைக் காத்ததனல் அவனுக்கேற்பட்ட நஷ்டமோ?

கோபு குனிந்த சமயம் அவன் சட்டைப் பையிலிருந்த நான்கு ரூபாய்களும் ஆற்றில் விழுந்து விட்டன.

''அட பகவானே!'' என்று தலையில் கையை வைத்துக் கொண்டு விட்டான் பையன். கூடவிருந்த பிரயாணிகளுக்கும் கரையில் நின்ற சோதாச் சிறுவர்களுக்கும் அவனைக் கேலி செய்து சிரிப்பதற்குத்தான் தோன்றிற்று. அவன் பட்ட மனக்கஷ்டத்தை உணர்ந்து அநுதாபம் காண்பித்தவர்கள் யாருமில்லை.

இந்த நிலைமையில் வேறு யாரிடம் போய் உதவி வேண்டுவது? எப்படியும் மறுநாள் காலை சென்னையில் இருக்க வேண்டியது அவசியம். எனவே கோபு டிக்கட் இல்லாமல் ரெயிலேறத் துணிந்து விட்டான்.

* • *

அச்சத்துடன் எதிர்பார்த்த ஆபத்து கடைசியில் வந்தே விட்டது. வண்டி விழுப்புரத்தை நெருங்கிக்கொண் டிருந்த சமயம் அந்தப் பெட்டியின் எதிர்க்கோடியில் வெள்ளை உடை தரித்த டிக்கட் பரிசோதகர் மாயமாகத் தோன்றினர். பிச்சைக்காரர்கள் இருவரும் எப்போதோ தம் வேலையை முடித்துக்கொண்டு இறங்கிவிட்டனர். கோபு மட்டும்தான் டிக்கட் இல்லாப் பிரயாணியாக அங்கிருந்தான். அவன் மனம் 'பக் பக்' கென்று அடித்துக்கொண்டது. மற்றவர்களது டிக்கட்டுகளைப் பரிசோதனை செய்தவாறே ஒவ்வொரு நிமிஷமும் அவனை நெருங்கிக்கொண் டிருந்தார்.

திடீரென அவனது கலங்கிய மூளையிலும் ஒரு யோசனை உதயமாகியது.

பரிசோதகர் அவனிடம் வந்து கையை நீட்டியதும், ''நான் ஒரு ரெயில்வே சிப்பந்தி, ஸார்! எனவே டிக்கட் வாங்கவில்லை'' என்று ஒரு போடு போட்டான்.

அவர் அவனை ஏற இறங்க ஒரு முறை பார்த்தார்.

''என்ன தம்பீ! நம்மிடமே கதை விடுகிருயே. சிப்பந்தியானல் 'இலவச பாஸ்' வாங்க வேண்டாமா? அது எங்கே?''

''அதற்குத்தான் ஊரிலிருந்து விண்ணப்பம் அனுப்பியிருந்தேன். அது வருவதற்குத் தாமதமாகி விட்டது. அதற்குள் என் லீவும் முடிந்துவிட்டபடியால் புறப்பட்டு விட்டேன்'' என்றுன் கோபு தயங்காமல். ஒரு பொய்யை மூட ஒன்பது பொய்கள் சொல்லியே தீர வேண்டுமல்லவா? அதற்கான துணிவு அவனுக்கு எங்கிருந்துதான் வந்ததோ, தெரியவில்லை.

"நீ சொல்வது நிஜமென்று நான் எப்படி நம்புவது?" என்றார் பரிசோதகர்.

"வேண்டுமானால் வண்டி எழும்பூர் சேர்ந்ததும் அங்கே விசாரியுங்கள். நான் வேலை செய்வது அங்கேதான்." இது கோபுவின் அடுத்த வெடிகுண்டு.

"சரியாய்ப் போயிற்று. எனக்கு விழுப்புரம் வரையில்தானே தம்பி, 'டியூடி?' உன் யோக்கியதையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக நான் எழும்பூர் வரையில் வர வேண்டும் என்கிறாயா?"

பரிசோதகர் சற்று யோசித்தார். அவர் முகம் மலர்ந்தது. "தம்பீ. என்னுடன் வா" என்றார்.

"எங்கே ஸார்?"

'இதே வண்டியில் எழும்பூர் ஸ்டேஷனில் வேலை செய்யும் ரெயில்வே அதிகாரி ஒருவர் பிரயாணம் செய்துகொண் டிருக்கிறார். அவரிடம் உன்னைக் காண்பித்து விசாரித்தால் ஒரு நொடியில் உண்மை துலங்கி விடுகிறது..வா, வா."

கோபுவுக்குப் பகீரென்றது. எழும்பூரில் இதுவரை அவன் கால்



வைத்தவனே அல்ல. இப்போது அவன் குட்டு வெளிப்பட்டுவிடுவது நிச்சயம். அத்தனைத் துணிச்சலாக ஏமாற்ற முயன்றதற்குத் தண்டனையின் கடுமையும் இரட்டிப்பாக இருக்குமென்பது இன்னும் உறுதி. அங்கமெல்லாம் நடுங்கியவனுகைப் பரிசோதகரைப் பின்தொடர்ந்து சென்ருன் அவன்.

* * *

முதல் வகுப்புப் பெட்டியில் கம்பீரமாக அமர்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்த கனவான் தலையைத் தூக்கிப் பார்த்தார். நயமாக அவருக்கு ஒரு சலாம் போட்டு விட்டுப் பரிசோதகர் நெருங்கினுர். "தொந்தரவு கொடுப்பதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள், ஸார். இந்தப் பையன் டிக்கட் இல்லாமல் ரெயிலேறியிருக்கிருன். கேட்டால் 'நான் எழும்பூர் ஸ்டேஷனில் வேலை செய்யும் ரெயில்வே சிப்பந்தி. இலவச பாஸ் வந்து சேருவதற்குத் தாமதமாகி விட்டபடியால் டிக்கட் வாங்காமல் ரெயிலேறிவிட்டேன்' என்கிருன். நீங்களும் அங்கேயே உத்தியோகம் பார்ப்பதனுல், உங்களைக் கேட்டால் ஒருகால் உண்மை தெரியலாமென இவனை இங்கே அழைத்து வந்தேன்" என்று விவரித்தார்.

படாடோபமாக ஐரோப்பிய உடை தரித்த கனவான் கோபுவை ஒரு நிமிஷம் விறைக்கப் பார்த்



தார். பின் தம் பிரம்மாண்டமான மீசையைத் தடவிக்கொண்டே சொன்னார்: "ஆமாம்.. இவனைக் 'குட்ஸ் ஆபீ'சில் அடிக்கடி பார்த்திருக்கிறேன். இப்போது தான் ஞாபகம் வந்தது" என்றார். அந்த ஒரு நிமிஷத்திற்குள் கோபுவுக்கு உயிர் போய்த் திரும்பி வந்துவிட்டது. தனக்குச் சாதகமான இந்தப் பதிலை அவன் சற்றும் எதிர் பார்க்கவேயில்லை.

"அப்படியானால் சரி, ஐயா. தங்களுக்கு மிக்க சிரமம் கொடுத்து விட்டேன்.." பரிசோதகர் கனவானுக்கு இன்னொரு சலாம் போட்டுவிட்டு மெல்ல நழுவினார். கோபுவும் அதே புண்யாத்மாவுக்கு அதைவிடப் பெரிய கும்பிடாகப் போட்டு விட்டுக் கீழிறங்கி மறுபடியும் தன் மூன்றும் வகுப்புப் பெட்டியில் போய்ச் சேர்ந்தான்.

* * *



உரிய காலத்தில் புகைவண்டி சென்னை சேர்ந்தது. அங்கே மீண்டும் டிக்கட் சேகரிப்பவரிடம் சிக்காமல் தப்பித்துக்கொண்டு வெளியேறிய கோபு, ஸ்டேஷனுக்கு வெளியே பஸ்ஸிற்குக் காத்திருந்த அதே கனவானைக் கண்ணுற்றான். வேண்டுமென்றே ஒரு பொய் சொல்லித் தன்னைப் பெரும் ஆபத்தினின்று காப்பாற்றிய அவருக்குத் தன் நன்றியைத் தெரிவிக்காது போக அவன் மனம் இடந்தரவில்லை. விஷயத்தைக் கூறினான்.

கோபுவின் வார்த்தைகளைக் கேட்டு நகைத்தார் அவர். "அட! அப்படியானால் நீ உண்மையில் ஒரு ரெயில்வே சிப்பந்தியில்லையா?" என்று கேட்டார்.

"இல்லை, ஐயா!" என்றான் கோபு திகைப்புடன்.

"நானும் அந்தப் பரிசோதகர் நினைத்தது போல் ஒரு ரெயில்வே ஆபீஸர் அல்ல. கேவலம் உன்னைப் போல் ஒரு டிக்கட்டில்லாப் பிரயாணிதான். சொப்பனத்தில் கூட முதல் வகுப்புப் பிரயாணம் செய்யும் தகுதி எனக்குக் கிடையாது. என்றாலும் நான் என்ன செய்தேன், தெரியுமா? ஆடம்பரமாக உடை தரித்துக் கொண்டேன்; வண்டியில் ஏறினேன். பரிசோதகர் என்னையும் வந்து டிக்கட் கேட்டான். நான் ஒரு ரெயில்வே ஆபீஸர் என்று அறிவித்ததும் அரண்டு போய் விட்டான். என் நல்ல ஆடைகளும் ஆங்கிலப் பேச்சும் அவனை முற்றிலும் நம்பச் செய்துவிட்டன. இதில் வேடிக்கை என்னவென்றால் உன்னைப் பற்றி விசாரிக்க அவன் மறுபடி என்னிடம் வந்து சேர்ந்ததுதான்!

"உன் உண்மை நிலை எனக்குத் தெரியவில்லை. என்றாலும் உனக்கு உதவுவதனால் நஷ்டம் ஒன்றும் ஏற்படப் போவதில்லையென்று கண்டு சிறிது கற்பனைசக்தியுடன் புளுகி வைத்தேன்" என்றார் அந்தப் பொல்லாத கனவான்.

கோபுவால் இந்தக் கதையைக் கேட்டுச் சிரிக்காதிருக்க முடியவில்லை.

"என்ன தம்பீ, சிரிக்கிறாய்? இதுதான் உலகம். தெரிந்து கொள்" என்று கூறி அவன் முதுகில் ஒரு தட்டுத் தட்டிவிட்டு அப்போது வந்துகொண்டிருந்த பஸ்ஸில் தாவி ஏறினார் அவர்.

"நல்ல உலகம் இது!" என வாய்க்குள் கூறியவாறே, கோபு தன் நண்பன் விலாசம் நோக்கி நடந்தான்.


யாரும் எதிர் பாராத போதே......
ரதம் ஓட்டுபவனைக் கீழே தள்ளி...
உள்ளே..
ஆ! ஒரு பெண்!
..





# இதோ, ஒரு புத்தகம்!

## மின்னல் அரக்கன்

மாயாபுரி நீலவேணி மாயக்காரி. அவளுடைய மர்மத்தை நொண்டி அன்னத்தின் மூலம் அறிகிறான் மூன்றாம் இளவரசன். அவள் மர்மம் என்ன? முதல் இரண்டு இளவரசர்கள் எங்கே? இந்தக் கேள்விகளுக்கு ஜனா அவர்கள் விடையை இப்புத்தகத்தில் விளக்கிக் கூறியிருக்கிறார். சுஜாதா பலே பேர்வழி. அவளுடைய அறிவுத் திறனை அரசன் மெச்சுகிறார். அவளைச் சோதிக்க ஒரு போட்டி வைக்கிறார். அவள் அப்போட்டியில் வெற்றி பெற்றாளா? கறுப்பன் அவிநாசனின் சொத்தைப் பறிக்க ஒரு பழியை அவன்மேல் சாட்டுகிறான். ஆகவே அவிநாசன் ஜடா முனிக்கோட்டைக்குச் செல்ல நேருகிறது. அங்கே அவன் அரசனின் நிபந்தனைப்படி ஜடாமுனியைக் கொல்கிறானா? 'திருட்டுத்தனம் செய்தால் அந்தத் திருட்டு எப்படியும் வெளிப்படாமலா போகும்!' என்ற நீதியை விளக்குகிறது ஜாஜாலியும் குதிரையும் என்ற கதை. இப்புத்தகத்தின் பெயரில் வந்துள்ள கதை திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்தது. மின்னல் அரக்கனை வெல்கிறான் சுகுமாரன். அடேயப்பா! மின்னல் அரக்கனிடம் அவன் பட்ட துன்பங்களைச் சொல்லி முடியாது. ஒரு பெண்ணின் மூடத்தனத்தால் வந்த வினைகளை விளக்குகிறது 'ரூப குமாரன்' என்ற கதை. மொத்தத்தில் ஜனா அவர்கள் இதிலுள்ள ஆறு கதைகளை எளிய நடையில் எளிதில் விளங்கும் முறையில் எழுதியுள்ளார். —கே. ஹாரிஸ்பாபு, பாளையங்கோட்டை.

## குளிகைத் தீவு

குளிகைத் தீவு! ஆகா! இந்தப் பெயரே புத்தகத்தைப் படிக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகிறதே! இளவரசன் நாகநந்தனும், மந்திரி குமாரன் பிம்பரூபனும், பூம்புகாரிலிருந்து கலத்தில் புறப்பட்டு, பல நாட்களுக்குப் பிறகு குளிகைத்தீவை அடைகிறார்கள். மந்திரச்சேலை கொண்டு வருவதற்காக நாகநந்தன் தனது சூரக்கழுகின் உதவியால் நூறு யோசனை தூரம் கடந்து பல இடையூறுகளை யெல்லாம் வென்று மந்திரத்தீவை அடைகிறான். மந்திரத்தீவின் அரசியின் தந்திரத்தால் பெண்ணாக மாறி, பின்பு கிளி உருவில் இருந்து குளிகைத்தீவு அரசி உதவி செய்ததன் பயனாக, பழைய நிலையை அடைந்து, பிறகு அந்த அரசியையே மணந்து வெற்றிவீரனாகத் தாய்நாடு திரும்புகிறான். மிகவும் உணர்ச்சி ஊட்டும் வகையில் ஆசிரியர் 'ஆர்வி' இதை அழகு படுத்தியுள்ளார். புத்தகத்தைப் படிக்கும்போது நம்மை அது எங்கெல்லாமோ இழுத்துச் சென்று மயக்கத்தில் ஈடுபடுத்துகிறது அழகான நடை, கருத்துக்குவியல், அழகுக்கு அழகு செய்யும் சித்திரக்குவியல், இவை அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றது. விலை நாலே அணாதான்.

—வே. மித்தர், கோவில்பட்டி.

## குளிகைத் தீவு

குளிகைத் தீவு கதை அற்புதம். நான்கணாவுக்கும் அருமையான புத்தகங்கள் வெளியிட முடியும் என்பதை நிரூபித்து விட்டன கண்ணன் வெளியீடுகள். அருமையான கதைப்போக்கு. அபாரமான சித்திரங்கள். 28 பக்கங்களையும் படிக்கும்பொழுது நாம் இவ்வுலகில் இருப்பதாகவே தெரியவில்லை. எத்தனையோ கதைகள் எழுதிப் புகழ்பெற்ற 'ஆர்வி'யின் எழுத்துத் திறமைக்கு எடுத்துக்காட்டு இது. சுருங்கச் சொன்னால் இந்தக் கதையைச் சிறுவர் ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்கவேண்டும். கதை: ஆர்வி. சித்திரம்: சங்கர். கிடைக்குமிடம்: கண்ணன் காரியாலயம். மயிலாப்பூர், சென்னை-4. —எஸ். ஆர். நாராயணன், பத்தமடை.

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS (PRIVATE) LTD., MADRAS-4,
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.


மரத்தில் மோதிய ரதத்தின் உள்ளே
இருந்த பெண் மயக்கம் தெளிந்து ...


புலிக்குட்டி சண்டையிடும் போது ....
ஹா! ஈட்டி!


புலிக்குட்டி தன்னை பின் இருந்து தாக்க வந்தவன் ஈட்டியைக் கைப்பற்றி, அவனை கீழே தள்ளிய சமயம், புலிக்குட்டியின் ஆட்கள் வருகிறார்கள் ....

(தொடரும்)

# கண்ணன் பரிசுத் தொடர்கதை

சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டும் நடைபெறும் தொடர்கதைப் போட்டியைப்பற்றி முன்பே அறிவித்திருக்கிறோம்.

நிபந்தனைகள்:—

(1) சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும்.

(2) காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் தெளிவாக இடம் விட்டு எழுதவேண்டும்.

(3) கண்ணன் இதழில் 6 பக்கங்கள் வீதம் 12 இதழ்களுக்கு மேல் போகாமல் இருக்கவேண்டும்.

(4) தேர்ந்தெடுக்கப்படும் கதையைக் கண்ணனில் தொடர்ச்சியாக வெளியிட்டு, புத்தகமாகவும் வெளியிடுவோம்.

(5) குழந்தைகள்-குழந்தை எழுத்தாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

(6) முடிவுத் தேதி 31—8—'56.

மற்ற விவரங்களை, 15—7—'56 'குழந்தைகளே!' பகுதியில் காணலாம்.

—ஆசிரியர்.

---

# பேனா நண்பர்கள்

1. B. விசுவநாதன், C/o G. பாலகிருஷ்ணன், விங்கிள்ஸ் ஹவுஸ், தரம்பேட், நாகபுரி.
2. V. V. ரமணன், 'ராதா இல்லம்', 22, பெரிய கோவில் ஸன்னிதித் தெரு, மாயவரம்.
3. S. K. S. மனோகரன், ஆறும் படிவம்- ஆ. பிரிவு, அரசர் உயர்நிலைப் பள்ளி, ராமநாதபுரம்.
4. R. சுகுணிச்சாமி, ஆறும் படிவம், C. P. Y. H. ஸ்கூல், கம்பம், மதுரை ஜில்லா.
5. R. துர்க்காபிரசாத், C/o R. ராமமூர்த்தி ராவ், எலக்டிரிக் எஞ்சினியர், ஆம்பூர். (வ. ஆ.)
6. K. ராஜலிங்கம், பன்னக் கட்டைத் தெரு, பருத்தித் துறை, இலங்கை.

8/17/9

(Regd. as a News Paper in Ceylon) Reg. No. M. 554

# கண்ணன் வெளியீடுகள்

**லீடர் மணி - ஆர்வி** 1 8 0

இளைய தாயாரின் கொடுமைகளுக்கிடையே கிராமத்தில் பள்ளிப் படிப்பை முடிக்கிறான் மணி. மேலே படிக்கப் பக்கத்து நகரத்திலுள்ள அத்தை வீட்டுக்குச் செல்கிறான். அங்கேயும் அவர்கள் கொடுமை தாங்காமல் நடு இரவில் வெளியேறி விடுகிறான். வழியில் நண்பனாக வரும் கங்கன் ஆசை காட்டி அவனைச் சென்னைக்கு அழைத்துச்சென்று நடுத்தெருவில் விட்டுச் செல்கிறான். பலவித இன்னல்களையும் சமாளித்த வாறே விடாமுயற்சியுடன் நன்றாகப் படித்து வெற்றி பெறு கிறான். லீடர் பட்டம் பெற்ற அவனை விமான நிலையத்தில் அனைவரும் வரவேற்கிறார்கள். படிக்கப் படிக்கத் தெவிட் டாத கதை. சுவையான சம்பவங்கள். சிறுவர் ஒவ்வொரு வரும் படித்து அநுபவிக்க வேண்டிய ரஸமான நாவல்.

**அசட்டுப் பிச்சு** - ஆர்வி 1 0 0

ஏ. பி. என்ற பையனை ஊரில் உள்ள மற்ற நண்பர்கள் அசட்டுப் பிச்சுவாக்கி விடுகிறார்கள். அவன் நடையும் உடையும் அப்படித்தான் இருக்கின்றன. ஆனால் அவன் அதிருஷ்டமோ அளவிட முடியாமல் இருக்கிறது. பெரிய பெரிய திருட்டுக்களையெல்லாம் அநாயாசமாகக் கண்டு பிடித்து விடுகிறான் அவன். பெயரும் புகழும் அவனைத் தேடி வருகின்றன. அடுக்கடுக்கான சம்பவங்களும் அழகான சம் பாஷணைகளும் நிறைந்த அருமையான கதை.

**அபாயச் சங்கு - நீலம்** 0 8 0

விஷமக் கொடுக்கான ரகுவை, பட்டணத்துக்கு அனுப்பி னால் அடங்கிவிடுவான் என்று நினைக்கிறார்கள். ஆனால் புறப் பட்ட ரெயிலிலேயே முதலில் தன் கைவரிசையைக் காட்டு கிறான் அவன். பள்ளிக்கூடத்தையே இரண்டு செய்கிறான். அவனைக் கண்டால் தெருவே நடுங்குகிறது. ஆனால் கடைசி யில்.. சுவாரஸ்யமும் விறுவிறுப்பும் நிறைந்த கதை.

---

**கலைமகள் காரியாலயம், சென்னை-4.**